பண்டைக்காலத்தமிழரும்ஆரியரும்,

இது

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜி

தமிழ்ப்புலமை நடாத்தும்

பண்டிதர். நாகை. வேதாசலம்பிள்ளையால்

எழுதப்பட்டு,

சென்னை:

மிமோரியல் அச்சியந்திரசாலையில்

முத்திரீகரிக்கப்பட்டது.

1906.

All Rights Reserved.

இஃது

இறைவன் திருவடி நீழல் எய்திய

என் அருமை மகள்

மரகதவல்லியை

நினைவுகூர்தற்கு அறிகுறியாக

வகுக்கப்பட்டது.

PREFACE.

The matter which forms the subject in the subsequent pages is a lecture delivered by me in May 1905, at the annual meeting of the Madura Tamil Sangam. Many points which were slightly touched and many a quotation which was omitted during the course of its delivery owing to want of time, are here enlarged and inserted for the benefit of the readers.

The subject is quite a new one to the main portion of the Tamil-speaking population. Even to the historians of the west it is a new theme. It is only of late that Pandit D. Saviriroyan and Prof. RhysDavids have given a new turn to the historic studies of the Indian races and their literature. Pandit Saviriroyan's 'Admixture of Aryan with Tamilian' and Prof. Davids' 'Buddhist India' have set up new lines of researches to be carried on in the study of Indian history and stimulated the interest of all impartial students whether Brahmin or Non-Brahmin to seek for their guide in the old Tamil literature and the ancient Buddhist works in Pali.

The indigenous races of India belonged to Tamil and even in the dim pre-historic times they were far advanced in mental culture. When the Aryans had come into contact with the Tamils, the civilisation of the latter was the primary element at work in effecting a thorough change in the social, moral and intellectual constitution of the former. The result produced by the commingling of the two races is, I believe, clearly shown in this lecture. Still the subject is such that it requires an elaborate treatment of the facts briefly mentioned here and I hope to do it in my separate English work 'Tamilic India.'

I need hardly say that I am deeply indebted to Pandit Saviriroyan and Prof. RhysDavids my forerunners in the new lines of studies in the history of ancient India.

Madras, 25th July, 1906. — R. S. VEDACHALAM.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்,
க.	கசு.	ஒருக	ஒழுக.
கரு.	கரு.	வாழ்நதா	வாழ்ந்தா
கரு.	கரு.	எனியோர்	எளியோர்
கசு.	கஎ.	வருடங்களுககு	வருடங்களுக்கு
,,	உக.	ஈணடு	ஈண்டு
உரு.	உச.	படுவனவாம்	படுவனவாம்.
உரு.	ச.	தமிழ	தமிழ்
உசு.	ரு.	வெல்லரம்	வெல்லாம்
ருஉ.	கக.	நூலிற்களி	நூல்களி
,,	உக.	ளிப்பை	களிப்பை
ருசு.	ரு.	தம்மை	தம்மைப்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

1905ளூ த்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் செய்தஉபந்நியாசம்.

பண்டைக்காலத்தமிழரும் ஆரியரும்.

மனவியற்கையினுஞ் சரீர அமைப்பினும் மற்றை வழக்க ஒழுக்கங்களினுந் தம்முட் பெரிதும் வேறுபட்ட மக்கட்சாதியுள் தமிழரும் ஆரியரும் எனப்படுகின்ற இவ்விருதிறத்தினருந்தமக்குள் எவ்வாற்ருனும் வேறுபடுதல் போல ஏனைப்பிறர் அங்ஙனம் முரணிநிற்றல் ஆராய்தற்கு விசேட முடைத்தென்று தோன்ற மாட்டாது. இவ்விருசாதியாரும் பண்டைநாளில் நிரம்பவும் மாறுபட்டு நின்றவாறு போலப், பின்றைநாளில் மிகவும் ஒருமைப்பட்டு இவர் தமிழர் இவர் ஆரியர் என்று பகுத்துணர்தற்கு அரியராய்ச் சீவித்து வருகின்ருர். இங்கே தமிழர் என்று குறிப்பிடப்பட்டோர் தமிழ்ப் பாஷை வழங்குவோர் என்று கொள்ளற்க. பிற்றைஞான்று தமிழரும் ஆரியரும் பேதந்தோன்ருவாறு கலந்து ஒருவர்க்குரிய பாஷையினையும் வழக்க வொழுக்கங்களையும் ஏனையோர் அனுசரித்துப் போதருகின்ருராகலின், இவர்தம்முள் வழங்கும் பாஷையினை ஓர் அடையாளமாகக் கொண்டு இவர்தம்மைத் தமிழர் ஆரியர் என்று பகுத்துரைத்தல் ஒரு சிறிதும் பொருந்தாது. பண்டைக்காலத்துத் தன்னந்தனியராய்த் தென்றிசைக்கண் வசித்துத் தமக்குரிய ஒருகலாற்றினைப் போற்றித் தமிழ்வழங்கிய முதுமக்களின் இரத்தக் கலப்பிற்றிரண்டெழுந்து போதருகின்ற சந்ததியாரே பிற்றைஞான்று தமிழர் எனப்பெயர் பெறுதற்கு உரிமையுடையா ரென்பதும், அவ்வாறே முன்னைநாளில் ஆசியாக்கண்டத்தின் வடக்கேயுள்ள வடநாடுகளில் வசித்துக் கொண்டு ஆரியபாஷை வழங்கிய முதுமக்களான ஆரியர் மாட்டுத் தோன்றிய சந்ததியாரே பின்னுளில் ஆரியரென்று பெயர் பெறுந் தகுதியுடையா ரென்பதும் ஈண்டு உணரற் பாலனவாம். பலநூற்ருண்டுகளுக்கு முன்னரே தமிழரும் ஆரியரும் ஒருங்கு கலந்தமையாற்ருேன்றிச் சந்ததிப்பாகுபா டுடையராய் வருகின்ற

இந்தியரை இவர்தாம் தமிழர் இவர்தாம் ஆரியர் என்று பேதம் இனிது புலனும்படி வேறுபடுத்து வழங்கல் இஞ்ஞான்று ஒரு சிறிதும் ஏலாதாயினும், இக்கட்டுரையில் பண்டைநாளிற் பேதம் விளங்கவாழ்ந்த அவ்விருசாதியாரைப் பற்றியே ஆராயப்புகுந்தேமாகலின் அங்ஙனம் வேறு வேறு பெயர் குறித்துக்கூறல் குற்றமாதல் இல்லை என்க. அது கிடக்க.

ஐரோப்பிய பண்டிதர்கள் வடமொழி தென்மொழியில் எழுதப்பட்ட நூலுரைகளின் காலம் வரையறுத்தற் பொருட்டு இடைவிடாது செய்து வரும் பெருமுயற்சிகளால், கிறிஸ்து பிறந்தநாள் தொடங்கி இன்றுகாறும் எழுந்த நூலுரைகளின் காலம் ஒருவாறு துணியப்பட்டு வருகின்றது. சைவசமயாசிரியரான திருஞானசம்பந்தர் காலம் நிச்சயிக்கப்பட்டமையால், அவர்க்கு முன்னும் பின்னும் மிக இருண்டு கிடந்த நூலுரைகளின் காலம் விளக்கமுற்று வருகின்றன, இவ்வாறே வடமொழியில் மிகச் சிறந்த நல்லிசைப் புலவரான காளிதாசர் முதலியோர் காலம் நிச்சயிக்கப்பட்டமையால் அவர் காலத்திற்கு முற் பிற்பட்ட நூலாசிரியர் உரையாசிரியர் காலம் வரம்பு குறித்துரைக்கப்படுகின்றன. சென்ற இரண்டாயிரம் வருடங்களாக ஒரு தொடர்புற்றுக் கருகி யிருண்ட கால இருளின் இடையே மறைபட்டுப்புதைந்து கிடந்த நந்தாமணி விளக்காம் அப் பெரியார்காலம், மனவெழுச்சியும் நுண்ணறிவுமுடைய சிலரால் அகழ்ந்தெடுத்து உண்மைக்காரணங்களாற் றிரண்ட குன்றின்மேல் வைக்கப்படுதலின் நீண்ட அக்காலவிருள் வலிகுறைந்து வெளிறுகின்றது. இனி,இவ்விரண்டாயிர வருடங்களுக்கு முற்பட்டு இடிந்து வெறும்பாழாய்க் கிடக்குங் கால அரண்மனைவாயிலை அணுகி உட்செல்ல நோக்குகையில், அங்கு மிகப்பரவித்தோன்றும் இருள் கரிய மைச்சேறு குழைத்த குழம்பு போல் மிகத்திணிந்து காணப்படுவதாயிற்று. அதனைக் காண்டலும் எம் உள்ளம் பெரிதும் புழுக்கமுற்று "ஆ! இக்கால அரண்மனையினுள்ளே பண்டைக்காலத்து எம்முதுமக்கள் தொகுத்து வைத்த களஞ்சியங்கள் எத்தகையனவோ, அவற்றை எங்கண்ணாரக் காணவும் பெறுகின்றிலமே! அவற்றின் அருமை பெருமையை எங்ஙனம் உணர்வேம்!" என்று நினைந்து நினைந்து ஊடுருவிச் செல்லுதற்கு அரிதாம் அவ்விருளை நோக்கிய வண்ணமே மிக வருந்தி நின்றேம். அங்ஙனம் நிற்பேமுக்கு எதிரில்

விரிந்த அவ்விருளின் நடுவிலே மனவலிமையும் விடாமுயற்சியும் ஆழ்ந்த வறிவு முடைய சிலர் அஞ்சா நெஞ்சினராய் இயங்கும் அரவம் செவிப்புலனுயிற்று. கதுமென அப்பக்கமாய் உறுத்து நோக்க அவர் அங்கே புற்றுமூடிய சரக்கறையினைத் திறம்படப்பிரித்து, அதனுள்ளிருந்த பொற்பேழையினை உடைத்து அதனுள்ளிருந்த முழுமாணிக்க மணிகள் சிலவற்றைப் புறத்தே எடுத்து வைத்தனர். உடனே, அக்கால வரணில் விரிந்த இருள்வலி சுருங்குவதாயிற்று. அது கண்டு கரை கடந்த உவகையுடையேமாய் உள் நுழைந்து அவற்றினருகே சென்று விழைந்து நோக்க அவ்வரிய பெரிய முழுமாணிக்கமணிகள் தொல்காப்பியம், திருக்குறள், இருக்குவேதம், திரிபிடகம் முதலியனவாய் இனிது விளங்கின. பின் இவ்வருமருந்தன்ன நூல் விளக்கத்தினுலே அப்பண்டைக்கால வரண்மனையினுட்சிறந்த இடங்கள் பலவுங்கண்டு வியப்பேமாயினேம். அது நிற்க.

இனி இந்நூல்களின் துணைகொண்டு பண்டைக்கால வியல்பு முற்று முணர்தல் அரிதாய விடங்களினெல்லாம், தமிழ் ஆரியம் முதலான பாஷைகளில் முன்னும் பின்னுமுள்ள சொற்பிரயோகங்கள் தோன்றி நின்று அவ்விடர்ப்பாட்டை விலக்கி நம்ஆராய்ச்சியினை வலிபெறுத்தி வருகின்றன. நிலநூல் வல்ல ஆசிரியர் இந்நிலவுலக அமைப்பினையுந் தோற்றத்தினையும் நன்காராய்ந்து இதற்கு வயது குறிக்கின்றனர். இந்நிலவுருண்டையின் நடுவு மிகவிரிந்த குடைவாக விருக்கின்றது. அக்குடைவிலே தீக்குழம்பு நிறைந்து எரிந்து கொண்டிருக்கின்றது. அக்குடைவுக்கும் இந்நிலத்தின் மேற்புறத்துக்கும் இடையிலுள்ள மட்பகுதி பல அடுக்குகளாக அமைந்திருக்கின்றது. சிருட்டி காலத்திலே ஒரு பெருந்தீப்பிண்டமாக இருந்த இந்நிலங் காலந்தோறும் இறுகி யுறைந்து செல்கின்றதாகலின் இங்ஙனம் பல மண்ணடுக்குகள் உண்டாயின. இவ்வடுக்குகள் ஒவ்வொன்றனையும் அகழ்ந்து பார்த்து அவ்வடுக்குகள் உண்டாதற்குரியகாலம் இத்துணையாம் என்று நிலநூல்வல்ல ஆசிரியர் வரையறுத்திருக்கின்றனர். அவற்றுள் மேற்புறம்பிலுள்ள நான்காவ தடுக்கிலும் ஐந்தாவதடுக்கிலும் புதைந்து கிடக்குங் கல்லாலமைத்த கருவிகள் செம்பாலமைத்த கருவிகள் இரும்பா லமைத்த கருவிகள் முதலிய வற்றின் ஆராய்ச்சியால் அவ்வப்படையில் வசித்த மக்கள் நாகரிக நிலையினை உற்றுணர்ந்து நன்கு விளக்குகின்றனர். இவ்வாறே இதுகாறுஞ்

சென்றகாலத்தினையும் பல வடுக்குகளாகப் பகுத்து, ஒருகாலத்து வழங்கிய சொற்கள் அக்கால முடிவில் தாமும் வழங்குதலின்றி அதன்கட் புதைந்து கிடப்ப மற்றை யொருகாலத்து அப்பொருளைக் குறிக்க மற்றை யோர்சொல் தோன்றி அதுவும் அக்கால விறுதியிலே இறந்துபட்டுக்கிடப்ப வருஞ் சொன்முறையை நன்காராய்ந்து அவ்வக்கால வியற்கையினையும் அக்காலத்து மக்களியற்கையினையும் தெரித்துக்கூறுதல் சரித்திர வாராய்ச்சிக்கு இன்றியமையாதகருவியாம். ஒரு பாஷையிலுள்ள ஒவ்வோர் சொல்லும் அப்பாஷையின் வரலாற்றை நன்கறிவிக்குங் கருவியாமென்பது கடைப்பிடிக்க.

இனி மகாபாரதப்போர் நடந்ததுதொட்டு இதுகாறுஞ் சென்ற காலத்தினைச் சரித்திர ஆராய்ச்சிக்குள் வைத்து மூன்று கூறுக அறுத்து முதல் இடை கடை யென நிறுத்தி அவற்றினியல்புகள் பெரும்பாலும் நன்கு விளங்கவகுத்துக் கூறுதல் * சரித்திரகால ஆராய்ச்சி எனப்பெயர் பெறுநிற்கும். இனி இங்ஙனங் காலவரையறைப்படுதலின்றிப்பாரதப் போர்க்கு முற்பட்ட காலம் சரித்திர காலத்திற்கு முற்பட்ட பண்டைக்காலம்† எனப் பெயர் பெறும். கிறிஸ்து பிறப்பதற்கு 1400-வருடங்களுக்கு முன் நடந்த பாரதப் போரில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் பதினெட்டுநாள் வரையில் உதியஞ்சேரலாதன் என்னும் அரசன் சோறு கொடுத்தான் என்பதும், அதுபற்றியே அவனுக்குப் **பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்** என்னும் பெயர் வழங்குவதாயிற் றென்பதும் அவ்வரசனோடு ஒருகாலத்தினரான **முரஞ்சியூர் முடிநாகராயர்** என்னும் புலவர் பாடிய "மண்டிணிந்த நிலனும்" என்னும் புறநானூற்றுச் செய்யுளால் இனிது விளங்குதலின் அவ்வரசன் காலம் இற்றைக்கு மூவாயிரத்து நானூறு வருடங்களுக்கு முற்பட்ட தென்று நிறுவப்படும். இம் மூவாயிரத்து நானூறு வருடங்களுந் தொடர்ப்பட்டு வாழ்ந்து வருந் தமிழ் மக்கள் வரலாற்றினை ஒருவாறு காலங்குறித்து ஆராய்ந்துரைத்தல் சாலுமாகலின் இதனைச் சரித்திரகாலம் என்றுரைத்தாம். இங்ஙனங் காலவரையறுத்துச் சொல்லுதற்கு ஏலாது இம்மூவாயிர வருடங்களுக்கும் முற்பட்ட காலத்தைப் **பண்டைக்காலம்** என்று மாத்திரம் உரைத்தல் பெரிதும் பொருத்தமுடைத்தாதல் காண்க.

---

* Historic times † Pre-historic times.

இவ்வாறே ஆரியர்க்குள்ளும் பாரதப் போர்க்கு முற்பட்ட காலம் வேதகாலம் எனப்பெயர் பெறுவதாயிற்று. அது கிடக்க.

இனி இம்மூவாயிர வருடங்களுக்கு முற்பட்டுச் சென்றபழைய காலத்திலே இருந்த இருபெருஞ் சாதியாரான தமிழர், ஆரியர் என்பாரை நன்காராய்ந்து தங்கருத்து வெளியிடுதல் சரித்திர நூல் வல்ல ஆசிரியரெல்லார்க்கும் இன்றியமையாப் பெருங் கடமையாம். இஃதிங்ஙனமாகவும், சரித்திர நூல் வல்லாரிற் பெரும்பாலார் ஆரிய மக்களைப் பற்றியே பெரிதாராய்ந்து கூறி ஏனையோரை யாராயாது வைத்து வழுப்பட்ட கருத்துக்களையே மொழிந்து போயினர். தமிழ் மக்கள் வழங்கிய தமிழ்ப்பாஷை மிகப்பழையதாதலும், அஃதொரு தனித்த முழுமுதற் சொல்லாதலுந் தேருத அவர் பிற்றை ஞான்று தோன்றிய சில தமிழ் நூல்களில் வடசொற்கள் சில வழங்குதல் பற்றித் தமிழ் சமஸ்கிருதத்தினின்று தோன்றியதாமென்று கூறினர். அதுவேயு மன்றித் தமிழ்ப் பாஷையில் உள்ள அரிய பெரிய நூல்களெல்லாம் கி - பி 11-வது அல்லது 12-வது நூற்றாண்டிலே தாம் இயற்றப்பட்டன வென்றுங் கூறினர். இவர் கூற்றுக்களெல்லாம் நியாயவாராய்ச்சியின்றிக் கூறப்பட்டன வாகலின், அவற்றின்பொய்ம்மை ஈண்டறிவித்தல் வேண்டற்பால தொன்றேயாம். ஒருபாஷை பிறிதொரு பாஷையோடு இனமுடைத்தோ அன்றோ என்று அறிதல், அப்பாஷைகள் முதன்முதற் றோன்றுங்காற் பிறந்தசொற்களை வைத்து ஒத்து நோக்கு முறையான் மாத்திரம் பெறப்படுவதாம். மக்கள் தங்கருத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தல் வேண்டி இட்ட ஒலிக் குறிகளே சொற்களென்று கொள்ளப்படும். ஒருவர் மற்றையொருவரொடு பழகப் புகுந்த விடத்துப், பேசுகின்ற தம்மையும், முன்னின்று கேட்போரையும், பேசப்படுகின்ற பிறரையுஞ் சுட்டுதற்குச் சொற்கள் வேண்டுவர்; அச்சொற்கள் நான், நாம்; நீ, நீர்; அவன், அவள், அவர், அது, அவை என்பனவாம்; இவை ஒவ்வொரு பாஷையினும் முற் பிறந்தனவா மாகலின் அவற்றை ஒத்து நோக்குதலாற் பாஷை யொற்றுமை நன்கு தெளியப்படும். வடமொழியில் அகம், வயம் என்பன முறையே தன்மை யொருமைப் பன்மையாகும்; த்வம், யூயம் என்பன முன்னிலை யொருமைப் பன்மையாகும்; அஸௌ, அமூ:, அத:, அமூநி என்பன படர்க்கை உயர்திணை யஃறிணை ஒருமைப் பன்மையாம். தமிழிலும் வடமொழியி

வுமுள்ள இவ்விடப் பெயர்கள் தம்முள் ஒற்றுமை சிறிதும் எய்தா மையால் அவை வேறுவேருதல் தெற்றெனத் துணியப்படும். இனி மக்கள் தம்மோடு இன உரிமை யுடையாரைக் குறிக்குஞ் சொற்க ளும் அவ்வாறே முதற் பிறந்தனவாம். தமிழர் தமக்கு உறவினரா வாரை அம்மை, அப்பன், பிள்ளை, கணவன், மனைவி, அண்ணன், தம்பி, அக்கை, தங்கை என வழங்குவர்; ஆரியர் அவரை யெல்லாம் முறையே மாதா, பிதா, சுத அல்லது பால, பதி:, பார்யா, அக்ரஜா, ப்ராதா, ஸ்வஸா எனப் பெயரிட்டு வழங்குவர். இம்முறைப்பெயர்க ளுந் தம்மோடு இனப்படுதலில்லாமையால் இவையும் வேறுவேறென் பது துணிக. இன்னும் இவ்வாறே உணவுப்பெயர், எண்ணுப்பெ யர், கலப்பெயர், இடப்பெயர், பூதப்பெயர், விலங்கின்பெயர், உறுப் புப்பெயர், வினைப்பெயர் முதலியனவும் இவ்விரு பாஷைகளினும் வேறுபடுதல் காண்க. அவையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும். ஞானசாகரத்தில் 'தமிழ் வடமொழியினின்று பிறந்ததாமா?' என் னும் விஷயத்தில் விரித்து விளக்கினும், ஆண்டுக் கண்டுகொள்க. இவ்வாற்ருல் இவ்விருமொழியுந் தம்முள் ஒன்ருேடொன் றியைபில் லாத் தனித்தனிப்பாஷைகளாதல் நன்கு பெறப்படும். இனித்தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளுவு, குறும்ப, இருள, எர்க் கலா, எனுதி முதலான பாஷைகட்கெல்லாம் இப்பத்துவகைச் சொற்களும் பொதுப்பட நிற்றல் கண்கூடாயறியக் கிடத்தலின் இவ்வொன்பது பாஷைகளும் ஒன்ருேடொன் றினப்பட்ட ஒருதொ குதியாமென்ப துணரப்படும். இனி ஆரியருந் தமிழரும் பிற்றை ஞான்று மிக நெருங்கி மருவி வாழ்ந்தனராகலின் ஆரியபாஷைக் குரிய சொற்கள் தமிழினும் தமிழுக்குரிய சொற்கள் ஆரியத்தினுங் கலப்புற்றன. அவர் அங்ஙனம் நெருங்கியிராது வேரு யிருந்தகா லத்தே எழுதப்பட்ட நூல்களில் விரவிய சொல் வழக்குக் காணப்படு தல் சிறிதுமில்லை யென்க. சங்கச் செந்தமிழ் நூல்களில் ஒரோ வோர் ஆரியச்சொற்கள் காணப்படுதல் என்னையெனின்;—ஆரியமக் கள் தமிழரோடு அக்காலத்துத் தான் விரவுதற்குப் புகுந்தனராக லின் அச்சொற்கள் ஒரோவொன்று சுத்தச் செந்தமிழ்நூல்களினுங் காணப்படுவனவாயின. காணப்படினும், நூற்றுக்கு ஒன்றல்லது இரண்டு விழுக்காடு மிக அருகிவந்ததே யன்றிப் பிற்றை ஞான்றை நூல்களிற்போலப் பெருகிய வரவினவாய் அவை வந்ததில்லையென்க. இனி, அள், கள், கல், கு, சா, பண், பக், மின், வள், நல், மு முத

லான சுத்தச் செந்தமிழ்ப் பகுதிகளிற் பிறந்த ஆணி, அடவி, கடு, கலா, குடி, குண்டம், கூனி, குளம், கோட்டை, சவம், சாயா, பட்டி னம், பாகம், மீனம், வளையம், நாரங்கம், முகம் முதலான தமிழ்ச் சொற்கள் ஆரியபாஷையில் வழங்குதல் உய்த்துணரற் பாலதென்க. இவற்றின்விரிவெல்லாம் முன்ஞானசாகரத்திற் காட்டினும். இன்னு மிதன் பெற்றியா மெழுதிய முல்லைப்பாட்டாராய்ச்சியினும் நன்கு விளங்கும். அதுநிற்க.

இனித்தமிழ் சமஸ்கிருதத்தின் வேறாயதோர் தனிப் பாஷை யாயினும் அஃது ஆரியம்போல் அத்துணைப் பழமையுடையதன்று, நிரம்பவும் புதிதாய்த் தோன்றிய தொன்றாம் என்றுரைப்பார் உரை பொருந்தாமையும் அப்பாஷை யாராய்ச்சியான் ஒரு சிறிது காட்டு தும். தமிழில் ஒருபொருளை யுணர்த்துதற்குப் பல பொருள் நிற் றல் பிங்கலந்தை முதலான நிகண்டுநூல் கற்ற சிறு மகாரும் நன் குணர்வர். ஒரு பொருளை யுணர்த்துதற்கு ஒருசொல்லேசாலுமாக வும் அங்ஙனம் பலசொற்கள்வேண்டப்படுவதென்னையென நுணுகி யாராயின் அதனுண்மை இனிது புலப்படாநிற்கும். எடுத்துக்காட்டு மிடத்துக், துணத்தினையுணர்த்த உக சொற்களும், உயர்வினையுணர் த்த கள சொற்களும், வலிவினை யுணர்த்த ஙச சொற்களும், அச்சத் தினையுணர்த்த கக சொற்களும், மலையினை யுணர்த்த உஅ சொற்க ளும் வருகின்றன. பிறவும் இவ்வாறே. ஒரே காலத்து இச்சொற் களெல்லாம் ஒருங்கு பிறந்தனவாகா. ஒவ்வோர் சொல்லும் ஒவ் வோர் காலத்துத் தோன்றிச் சிலகாலமெல்லாம் நடைபெற்று அச் சொல் வழங்கிய மக்களோடு அதுவுமொழிய, அவர்க்குப் பின் னெழும் மக்களோடு பிறபுதிய சொற்கள் தோன்றி அவையு மவ்வாறே நடைபெற்றொழிய இங்ஙனம் பாஷை நாடோறுந் திரி பெய்தி வரும் இயற்கைத்தாமென்க. இவ்வாறு சொற்கள் தோன் றியும் வழங்கியும் மறைந்தும் போதரப் போதரும் பாஷை நாகரிக முதிர்ச்சியுடைய மக்கட்குரியதாயின் அதன்கண் அவ்வக்காலத்திரு ந்த அறிவுடையோரால் எழுதப்பட்ட நூல்களில் அச்சொற்கள் கன் மேலெழுத்துப்போற் செதுக்கப்பட்டு நிலைபெறும். அப்பாஷை அங்ஙனமன்றி அநாகரிகமுடைய மக்களால் வழங்கப்படுவதொன்றா யின் அதன்கட் காலந்தோறும் பிறந்த சொற்கள் எல்லாம் ஒருங்கே மறைந்தொழிய அப்பாஷையும் நாளடைவில் இறந்தொழியுமென்க.

ஒருகாலத்திருந்த மக்கள் ஒருபொருட்கண் உள்ள ஒருகுண விசேடம்பற்றி அப்பொருட்கொரு பெயரிட்டு வழங்குவர். அவ்வாறு வழங்கி வருகையில் அப்பெயர் பன்முறையும் வழங்கப்பட்டு வருதலின் அதன் காரணம் மறைந்தது; மறையவே, அச்சொல்லையுந் தமக்கு வேண்டியவாறெல்லாம் திரிவுபடுத்திக்கொண்டு வருதலின் அச்சொல் கடைசியில் வழக்கு வீழ்ந்தொழியப் பின் வருவோர் அச்சொல்லைவிட்டு அப்பொருட்கண் தாம் விசேடமாய்க்கண்ட குணம்பற்றி வேறு பெயர் தருகுவர். எடுத்துக்காட்டுங்கால், மரக்கொம்புகளை வெட்டுகின்ற கருவிக்குக் கோடரி என்று பெயர் (கோடு - கொம்பு; அரி - அரிவது); அதனைப் பன்முறையாலும் வழங்கிவரும் மக்கள் அதன்காரணம் மறந்தமையின் அப்பெயரைக் கோடாலி எனத்திரித்து வழங்குகின்றூர். இச்சொல் தன் உண்மை வடிவத்துடன் தமிழ் நூல்களிற் காணப்படாதொழியின் அஃதிஞ்ஞான்றிறந்துபோயிருக்கு மென்பதிற்றடையென்னை? முன்வழக்கு வீழ்ந்தொழிந்த சொற்களுந் தமிழ் நூல்களிற் பொறிக்கப்பட்டிருத்தலின் பின்வருவோர் அவற்றையும் ஒரோவொரு காலெடுத்து வழங்குதலுஞ் செய்திடுகின்றூர். அங்ஙனம் வழங்குவதுஞ் செய்யுள்வழக்கிற்கே உபயோகமாவதன்றி, எல்லாமக்களுக்கும் உரியஉலகவழக்கில் அஃதில்லாமையால் உலகவழக்கிற்குயாண்டும் புதுச்சொற்கள் வேண்டப்படுமென்றல் ஒரு தலையாம். அற்றேல், காலங்கடோறும் பழஞ்சொற்கள் வீழ்ந்தும் புதுச்சொற்கள் தோன்றியும் வருமாயின் பாஷையே முன்னிலைகெட்டுப் பின்வேறோர்நிலை எய்துமாலோவெனின்; அற்றன்று ஒருபாஷை முதன் முதல் உற்பத்தியாங்காலத்துப்பிறந்த பத்துத்தொகுதியிற்சேர்ந்த சொற்கள் அனைத்தும் எல்லாராலும் நாடோறும் திரிவின்றிவழங்கப்படும் இன்றியமையா நெறிமையுடையவாகலின் அச்சொற்கண்மாத்திரம் வழக்கு வீழ்ந்தழியாவென்பது அனுபவத்தில் வைத்துக்கண்டு கொள்க. அம்முதற்பிறவிச் சொற்கள்பற்றியே ஒருபாஷை வழக்கு வீழாது நிலைபெறுமென்றுணர்ந்து கொள்க. இனி அச்சொற்கள் ஒவ்வொன்றும் பிறந்து வழங்கிமறையப்பலநூற்றூண்டுகள் செல்லுமென்றல் அனுபவவறிவுடையா ரெல்லார்க்கும் இனிது புலனும். பண்டைத்தமிழ்மக்கள் மலைநாடுகளினுங் கடற்கரையோரங்களினும் வசித்தவரென்பது பின்னே காட்டப்படுமாதலால், அவர் வழங்கிய பாஷையில் மலை, கடல் என்னு மிரண்டையுஞ் சுட்டும் பெயர்கள் மிகுதியாகக் காணப்படும். அச்சொற்கள் எல்லா

வற்றையும் பழைய தமிழ் நூல்களில் ஆய்ந்து பொறுக்கி, எவ்வெச் சொல் எவ்வெக்காலத்து நூலிற் றோன்றிற்றென்று நிச்சயப்படுத்தி அம்முறையால் அச்சொற்களை முன் பின் வைத்துக் கணிப்பின் தமிழ்ப்பாஷையின் காலம் இனிது நாட்டப்படும். இங்ஙனங்காலங் கணிக்கும் முறையின் அருமையை நன்குணர்ந்தன்றே மாரிஸ் என்னும் ஆங்கில பண்டிதர் தா மெழுதிய ஆங்கிலபாஷை வரலாற்றில் இதனைக்கடைப்பிடித்து அதன் காலவளவை செவ்வனே குறித்திட்டார். அதுபோலவே, தமிழ்நூல் வல்ல ஆசிரியரும் இம்முறை வழாது ஆராய்ந்து தமிழ்ப் பாஷையின் பழஞ்சிறப்பை நிறுவுதற்குப் பெரிதுங் கடமைப்பட் டிருக்கின்றார். இக்கட்டுரையில் எம்மால் அங்ஙனங் காலநிச்சயஞ் செய்வதற்குக் கூடாதாயினும், ஒருபொருளைச சுட்டுதற்குப் பலசொற்கள் காணப்படும்அத்துணையே பற்றித் தமிழ்ப் பாஷை மிகப்பழைய பாஷையாமென்று கூறுதல் குற்றமாமாதில்லையென்க. அது கிடக்க.

இனிச் சொல்வழக்கானே யன்றிச் சொல்லுச்சாரண முறையானுந் தமிழ் மிகப்பழையதொன்றாதல் காட்டப்படும். தமிழில் வழங்கும் எல்லாச் சொற்கள் முதலினும் ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்னும் எட்டெழுத்துக்கள் நில்லாவென இலக்கண நூல்களில் ஒரு விதி காணப்படுதல் சிறிதிலக்கண அறிவுடையாரும் அறிவர். டமருகம், ரகு, ராமன், லம்பகம் முதலியனவாக ஆரிய பாஷைச்சொற்கள் அவ்வெழுத்துக்களை முதற்கொண்டு வருமாகவும், தமிழ்மாத்திரம் அங்ஙனம் அவ்வெழுத்துக்களை முதற்கண் நிறுத்துக் கொள்ளாமையும், அப்பிறபாஷைச் சொற்களையுந் தானெடுத்து வழங்கும் போது இடமருகம், இரகு, இராமன், இலம்பகம் என உயிர் முதல் நிறுத்து வழங்குதலும் என்னை என்று ஆராய்கின்றுழி அதனியல்பு நன்குணரக்கிடக்கும். சிருட்டிகாலத் தொடக்கத்திலே தோன்றிய மக்களியல்பும், நம்மனுபவத்திற் காணும் சிறுமகார் இயற்கையும் தம்முட் பெரும்பான்மையுஞ் சமமுடையனவாம். இஃதறிவுடையாரெல்லார்க்கும் ஒப்பமுடிந்தவோர் உண்மையேயாகும். பிள்ளைப்பருவத்திலே, சொல் உச்சரித்தற்கு இன்றியமையாக் கருவிகளான இதழ், நா, பல், அண்ணங்கள் வேண்டியவாறு இயங்காமையின் அப்பருவத்தே அம்மகார் வழங்குஞ் சொற்கள் மிகச்சிதைவுபடும். சிறுமகார் 'ராமா' என்பவனை 'ஆமா' வென்றழைப்பர். இவ்வுண்மை நாடோறும் அனுபவத்தா லறியற்பாலதேயாம். முன் மொழிக்கு

முதலாகா வெனப்பட்ட எட்டு மெய்யெழுத்துக்களும் நாமேலண்ணத்தைச் சென்று தொடும் முயற்சியாற் பிறப்பனவாம். நாவை மேலே சேர்த்தி உச்சரிக்கும் அம்முயற்சி பிள்ளைப்பருவத்தே தோன்றுமையின், அப்பருவத்தே பிறக்குஞ் சொற்களெல்லாம் அவ்வெழுத்துக்களை உடையனவாகா; சிருட்டி யாரம்பத்திற் றோன்றிய மக்களது நிலைமையும் பிள்ளைப்பருவத்தோடு இயைந்ததாகலின், அஞ்ஞான்று அவர் பிறப்பித்த சொற்களிலே அவ்வெழுத்துக்கள் காணப்படாவாயின. இதனால், தமிழ்ச்சொற்கள் மக்களுடைய முதற்பருவத்திலே உற்பத்தியாய் நிலவுதலுற்றன வென்பது எளிதிற் பெறப்பட்டது. வடமொழி முதலான மற்றைப்பாஷைச்சொற்கண் முதலிலெல்லாம் அந்நாவெழுத்துக்கள் நிற்றல் அறியப்படுதலின், அவை மக்களுடைய பிற்பருவத்திலே தோன்றியவா மென்பது துணிபொருள். மேலும், இப்போது நூல்வழக்காயுள்ள சமஸ்கிருதபாஷை மக்களால் எஞ்ஞான்றும் பேசப்பட்டதில்லை யென்றும், இதற்குத் தாய்மொழியான ஆரியமே அங்ஙனம் பேசப்பட்டதொன்று மென்றும் அப்பாஷையாராய்ச்சிவல்ல பண்டிதர்கள் பலரும் உரையாநின்றார். இவ்வாற்றால், மக்களுடைய முற்பருவத்திலே பிறந்த தமிழ்ப்பாஷை அவருடைய பிற்பருவத்திலே தோன்றிய சமஸ்கிருதபாஷைக்கும் முற்பட்டதொன்றுதல் முடிந்த வுண்மையாம். இதன்விரிவும் 'தமிழ் மிகப்பழைய மொழி' என்னும் ஞானசாகர உரையுட் காட்டினும். அதுநிற்க.

இனித்தமிழ் இலக்கண இலக்கிய விரிவானும் மிகப்பழையதொன்றென்பது காட்டப்படும். இப்போது தமிழில் வழங்கும் இலக்கணநூல்களுள் மிகப்பழையது தொல்காப்பியம் ஒன்றேயாம். குறைபாடின்றிப்பாகுபாடு நனிதெரித்துஎழுதப்படும் இலக்கணநூல் தமக்குடைய பாஷைகளெல்லாம் மிகச் சீர்திருத்தமுற்று நாகரிகம் நிரம்பிய பாஷைகளாகுமென்று அறிவுடையோர் ஒருப்பட்டுக் கூறுகின்றார். ஆங்கிலபாஷை இஞ்ஞான்று எவ்வளவோ சீர்திருத்தம் அடைந்தும் அதன்கண் உள்ள இலக்கணநூல்கள் ஒன்றாயினும் குறைபாடின்றி எழுதப்படவில்லை. தமிழோடு இனமுடைய தெலுங்கு மலையாளம் கன்னடம் முதலான பாஷைகள் பல நூற்றாண்டுகளாகச் சீர்திருத்தஞ் செயப்பட்டு வந்தும், அவற்றின் கண்ணும் இதுகாறும் இலக்கணநூல் ஒன்றேனுஞ் செவ்வையாக எழுதப்படவில்லை. இலக்கணநூல் செவ்வையாக இயற்றப்பட்ட பாஷைகள் இவ்வுலகில் எத்தனையுள்ளன வென்று எண்ணிப்பார்க்கும்வழி அவை மிகச்சில

வேறுளவாதல் எல்லாரானும் இலேசிலே யறியப்படும். அவற்றுள், தமிழ் சமஸ்கிருதம் என்னும் இருமொழிகளினும் எழுதப்பட்ட இலக்கண நூல்களின் பெருமையும் நுணுக்கமும் நிறைவும் ஆராயுந் தோறும் பேரின்பத்தை விளக்கின்றன. ஒருபாஷையைச் சீர்திருத்தம் பண்ணுவது ஒருவரிருவரான்முடியும் எளிய காரியமன்று: சுழன்று செல்லும் புயற்காற்றினையும், அணைகடந்து பெருகும் வெள்ளத்தினையும் இடைமறித்து நிறுத்தினும் நிறுத்தலாகும்; ஒருபாஷையின் விரைந்த செலவை அடக்கியாளுதல் யார்க்கும் முடியாத தொன்றும். வேதகாலத்திலே எழுதப்பட்ட ஆரிய பாஷை காவிய காலத்தில் எவ்வளவோ மாறுதலடைந்தது. போவுல்ப் கேடிமான் காலத்தில் நடைபெற்ற ஆங்கிலபாஷை சாசர் காலத்திலும், சாசர்காலத்திய பாஷை ஷேக்ஸ்பியர் காலத்திலும், ஷேக்ஸ்பியர் காலத்திய பாஷை டெனிசன் காலத்திலும் எத்தனை எத்தனையோ மாறுதல் அடைந்தன. இங்ஙனங்காலங்கடோறும் ஒரு பாஷையின் முன்னுருவந் திரிபெய்தி வருமாயின் அப்பாஷையின் ஒழுங்கை யறிந்து இலக்கணநூல்கள் இயற்றுதல் மிக அரிதாம். அது காலங்கடோறும் வேறுபட்டு வருமாயின் அதனைவழங்கும் மக்கள் தங்கருத்தறிவிக்க இலேசான கருவி காணமாட்டாது மிக இடர்ப்படுவர். இதுபற்றியே ஆங்கில அரசுடையார் தம்முடைய பாஷையினை ஒழுங்கு கடவாது நிலை பெறுவித்தற் பொருட்டுக் கல்விச்சாலைகள் பலப்பல வியற்றிப் பாஷையினைத் திருத்தமுறக் கற்பித்துக் கல்விவளம் பெருக்கி வருகின்றனர். நாகரிக மக்களிடத்து நடைபெறும் பாஷைகள் விரைவிலே வேறுபடுதலில்லை; புதிய சில சொற்கள் பிறரிடமிருந்து போந்து சேரும் அம்மாத்திரையே யன்றித் தம் சொரூபவியல் பெரிதுந்திரிபெய்தாது பரவி வழங்கும். ஒருபாஷை சொரூபந்திரிபடையாது நிலை நிற்றற்கு வேண்டும் முயற்சி என்னை என்று ஆயும் வழி அதன்கண் ஒவ்வொரு சொல்லும் பண்டுதொட்டு வழங்குமாறும், அச்சொற்கள் தோன்றுங்காற் பெற்றகாரணமும், அவை வாக்கியங்களில் தொடர்புற்று நின்று பொருள் அறிவிக்குமாறும், அவற்றோடு கலந்து வழங்கும் பிறபாஷைச் சொற்கள் இவை என்றலும் இனிது அறியப்பட்டு வருதலேயாம். இவை இவ்வாறு அறியப்படுதல் கற்றோரிடத்தன்றி மற்றையோரிடத்து இல்லையாலோ வெனின்; ஓர் ஊரில் கற்றறிவுடையார் ஒருவர் இருப்பினும் அவரால் அவ்வூரார் எல்லாரும் திருத்த மடைவார். நாழி நிறையப் பெய்தநீம்பாலில்

குற்றிய உறைத்துளி மிகச்சிறிதாயினும், அஃது அப்பால் முழுவதையும் தீஞ்சுவைத்தயிராகத் திரிபு செய்தல் போலக் கற்றோர் ஒருவரேயாயினும் அவர் தம்மைச் சூழ்ந்தார் அனைவரும் நலம் பெறச் செய்வர். எங்ஙன மெனின், அவர் தம்பால் வந்தணுகுவோர்க்குத் திருந்திய சொற்பொருளை அறிவிப்ப, அறிவிக்கப்பட்ட அவர் சீடர் தாம் அவற்றைப் பிறர்க்கு அறிவிப்ப, அப்பிறர் அவற்றை வேறு பிறர்க்கு அறிவிப்ப, இங்ஙனம் ஓரிடத்துத் தோன்றிய அலை தடாகத்தின் நாற்புறங்களினும் பலஅலைகளைத் தோற்றுவித்து நடைபெறச் செய்தல் போல அக்கற்றறிவுடையார் தாம் பெற்ற அத்திருத்தங்களெல்லாம் அவரறிந்தும் அறியாமலும் யாண்டும் பரவிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு உலகத்தில் நடைபெறும் ஒழுக்கங்களெல்லாம் கற்றோராற் சீர்திருந்தப்பெற்று வருதல் பற்றியே "உலக மென்பது உயர்ந்தோர் மாட்டே" என்னும் திருவாக்கு எழுந்தது.

இனி எந்த நாட்டில் தொன்றுதொட்டுக் கற்றோர் மிகுதியாய்ப் பல்கி வருவரோ அந்த நாடு வளம் பெருகும்; அதன்கண் உள்ளார் எல்லாரும் கல்வி மணம் பெற்று அறிவுவிளக்க முடையராவர்; அவர் வழங்கும் பாஷை மிகுந்த சிறப்புடையதாய் நிலைபெறும். தமிழ் நாட்டிற் பண்டைக்காலத்துக் கற்றறிவுடைய சான்றோர் கணக்கின்றியிருந்தா ரென்பதற்கு அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட அளவிறந்த நூல்களும், அளவிறந்த பாட்டுக்களுமே சான்றாம். புறநானூறு முதலான பழைய சங்கத் தொகைநூல்களைக் காண்பேமாயின், அவற்றிற் பெறுதற்கரிய முழுமணிபோன்ற அரிய பெரிய செய்யுட்களை இயற்றியருளிய அப்பெருந்தகையாளர் பேரறிவும் பெருந்தொகையும் பெரிதும் வியக்கற்பாலனவாயிருக்கின்றன. இற்றைக்கு இரண்டாயிர வருடங்களின் முன்னே நமது செந்தமிழ்ப் பாஷை எவ்வளவு திருத்தமாக வழங்கப்பட்டுலாவியது! அந்நாட்களிலிருந்த கற்றோர் நுண்ணறிவு எவ்வளவு தெளிவாக அவரியற்றிய பாக்களிலே துளும்பி ஒளி வீசுகின்றது! அப்போதிருந்த நன்மக்களெல்லாரும் எவ்வளவு இன்புற்று வாழ்ந்தனர்கள்! என்று நினைக்க நினைக்க எம் உள்ளம் வரை கடந்த இன்பத்தாற் பொங்குகின்றது. அக்காலத்தில் எழுதப்பட்ட தெய்வத்திருக்குறளுக்கு இணையான நூல் இவ்வுலகத்தில் உண்டோ? அஃது உயர்வு ஒப்பில்லா உவரா அமிழ்தமன்றோ! உள்ளன உள்ளபடி கூறிய முழுக்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவற்றின் முன்

தலையெடுத்து நிற்கும் வேறுகாப்பியங்கள் இவ்வுலகில் எந்தப்பாஷை யிலேனும் உளவா? இல்லையே! மக்கள் மனோதத்துவ இயற்கை யினைப் பகுத்து விளக்கிய இறையனாரகப்பொருளுரை போன்றநூல் இவ்விரிகடலுலகினும் இல்லையே. கலித்தொகையிலுள்ள இயற்கைப் பொருள்நுட்பமும், பலதிறப்பட்ட மக்கள் வழக்க ஒழுக்க ஆராய்ச்சி யும் வேறு எப்பாஷை நூலிலாயினும் உள்ளனவா? மனுமுதலிய தன்ம சாத்திரங்களெல்லாம் நாலடியாரை ஒக்குமோ? ஆ! அக் காலத்துத் தோன்றிய திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் அவ்வொருநூலை நோக்கினும் தமிழ்ப்பாஷையின் அமைதியும் சிறப் பும் இனிது புலப்படுமே. நண்பர்காள்! இங்ஙனஞ் சீர்திருத்த முற்று நிலாவிய இச்செந்தமிழை வழங்கிய மக்கள் எத்துணை நாகரிக முடையரா யிருந்தனராவர்!

இனி இந்நூல்களுக்கெல்லாம் மிக முற்பட்ட தொல்காப்பிய நூற் பெருமையைச் சிறிது ஆராய்ந்திடுவேமாயின் தமிழர் சரித்திர காலத்திற்கு முன்னும் மிக்க நாகரிகம் பெற்று வாழ்ந்தாரெனல் தெற்றென விளங்குகின்றது. தொல்காப்பியம் முற்கூறிய தமிழ் நூல்கள் எல்லாவற்றிற்கும் முன்றோன்றியதாதலை ஒரு சிறிது ஆராய்வாம். இது வடமொழியிற் பாணினி முனிவர் இயற்றிய அட்டாத்தியாயி என்னும் அரியபெரிய இலக்கணநூலுக்கும் முந்திய தென்று நாட்டவே, இதன்காலம் அத்தமிழ்நூல்களுக்கெல்லாம் முற் பட்டதாதலும் நன்குபெறப்படும். ஆகலின் முதலிற் பாணினி முனிவர் காலம் ஈண்டுச் சுருங்கவகுப்பாம். பாணினிமுனிவர் தாமி யற்றிய அவ்விலக்கணநூலில் இவ்விந்திய தேசத்தின்கண் உள்ள இடங்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றின் பெயர்க்கெல்லாம் இலக்கணம் வகுத்துரைக்கின்றார். பெரும்பாலும் அவராற் குறிக் கப்பட்ட நாடு நகரங்களெல்லாம் பஞ்சாப் தேசத்திலும் ஆப்கானிஸ் தானத்திலும் இருக்கின்றன. இந்தியாவில் தெற்குப்பிரதேசங் களில் அவராற் குறிக்கப்பட்ட இடங்கள் கச்ச * அவந்தி †, கோசல‡ கரூச §, கலிங்க § முதலியனவாம். இவையெல்லாம் விந்திய மலை

---

* ௪-ஆம் அத். ௨, ௧௩௩.
† ,, ௧, ௧௭௬.
‡ ௪-ஆம் அத். ௧, ௧௭௧.
§ ,, ,, ௧௭௮.
§ ,, ,, ,,

க்கு வடக்கேயுள்ளன. விந்தியமலைக்குத் தெற்கே உள்ள நாடு நகரங்களில் ஒன்றாயினும் அவராற் குறிக்கப்படவில்லை. ஆகவே, பாணினி முனிவர் காலத்து ஆரியமக்கள் விந்தியமலைக்கு வடக்கே உள்ள நாடுகளில் இருந்தா ரென்பதும், அம்மலையைக் கடந்து இப்பால் வந்ில ரென்பதும் இனிது பெறப்படுவனவாம்.

இனிப்பாணினீயத்திற்கு வார்த்திகை உரை எழுதிய காத்தியாயனர் விந்தியமலைக்குந் தெற்கே உள்ள நாடு நகரங்களைக் குறிப்பிடுகின்றார். ஓர் இடத்தின் பெயர் பற்றி அவ்விடத்திற் பிறந்த மக்கட்குப் பெயர் வருமாற்றைச் சுட்டிப் பாணினிமுனிவர் விதி கூறிப் பஞ்சாலத்தில் தோன்றினவன் பாஞ்சாலன், சால்வத்திற் றோன்றினவன் சால்வேயன் என்பனவாக உதாரணமுங் காட்டினார். 'ஈண்டு இச்சூத்திரத்தில் வேறு சில விடப்பட்டன' என்றுரைத்துக் காத்தியாயனர் "'பாண்டியன்' எனுஞ்சொற் பாணினியாற் சொல்லப்படவில்லை; பாண்டு குடியில் அல்லது பாண்டு நாட்டிற் பிறந்தோன் 'பாண்டியன்' எனப்படுவோன்" என்று புதிய ஓர் உரைவாக்கியமுஞ் சேர்த்தெழுதினார். இன்னும் இவ்வாறே 'சோழர்' 'மகிஷ்மத்' என்னுஞ் சொற்களும் அக்காத்தியாயனரால் ஆராய்ந்துரைக்கப் பட்டன.

இனிப்பாணினீயத்திற்கு மாபாடிய முரைத்த பதஞ்சலியார் 'மாகிஷ்மதீ' 'வைதர்ப்ப' 'காஞ்சீபுர' 'கேரள' முதலியவற்றையும் ஆராய்ந்து உரையுரைத்தார். அதுவேயுமன்றித் தம்முரையுட்காத்தியாயனர் வார்த்திகவுரை பாடபேதங்கள் பல உளவாதலும் எடுத்துக் காட்டினார். காத்தியாயனர் உரை பலபாட பேதங்கள் உடைத்தாய்த்திரிபெய்துதற்குப் பலநூற்றாண்டுகள் செல்லுமாகலின், அப்பாட பேதங்களைத் தம்முரையுட் குறித்த ஆசிரியர் பதஞ்சலியார்க்கு மூந்நூறு நானூறு வருடங்களின் முன் அக்காத்தியாயனர் இருந்தாராகற்பாலார். மற்றுப்பதஞ்சலியார் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐம்பத்தாறு வருடங்களின் முன் இருந்தாரென வட நூற் சரித்திர பண்டிதர்கள் நிறுவினாராகலின், காத்தியாயனர் காலம் உ௩௫௰ வருடங்களின் முற்பட்ட தென்பது பெற்றாம்.

இனிப்பாணினி முனிவராற் சொல்லப்படாத புதிய இலக்கண விதிகள் சில காத்தியாயனாராற் சொல்லப்பட்டிருப்பது கொண்டு, அவ்விதிகள் பெறுதற்குரிய சொல் வழக்குகள் சில பாணினிமுனி

வர்காலத்தி லில்லை என்பதூஉம், அவை காத்தியாயனர் காலத்தே தான் தோன்றின என்பதூஉம் பெறப்படுகின்றன. அதுவேயு மன்றிப் பாணினி முனிவர் காலத்து நடை பெற்ற சொற்கள் பல காத்தியாயனர் காலத்து வழக்குவீழ்ந் தொழிந்தன. இங்ஙனம் பாஷை திரிபெய்துதற்குப் பலநூற்றாண்டுகள் செல்லுமாகலின் பாணினி முனிவர்க்கும் காத்தியாயனர்க்கும் இடையில் விரிந்த காலம் நானூறு வருடத்திற்குக் குறையாதாகும். எனவே, பாணினி முனிவர் இற்றைக்கு உஅ00 வருடங்களுக்கு முன்னிருந்தா ரென்பது இனிது பெறப்படும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் சொல்லதிகாரத்தில் தமிழ்ச் சொல்லிலக்கணங்களெல்லாம் முற்றவுங் கூறினாராயினும், அச்சொற்கள் எவ்வாறு பிறந்தன என்று ஆய்ந்து அவைதம்மை யெல்லாம் பகுத்துப் பகுதிகளாக அடக்கிக்காட்டினாரில்லை. அங்ஙனமாயினும், ஒவ்வொரு சொல்லுங் காரணம் பற்றியே தோன்றினவென்றும், அக்காரணம் அறிவுடையார்க்கல்லது ஏனியோர்க்கு விளங்கத்தோன்றாவென்றும் குறிப்பிட்டு "மொழிப்பொருட்காரணம் விழிப்பத் தோன்றா" என்று சூத்திரஞ் செய்தருளினார். இவ்வாற்றால் தமிழ்ச்சொற்களைப் பகுதி, விகுதி முதலியனவாகப் பகுத்து ஆராய்ந்துரைக்கும் முறை தொல்காப்பியனார் நூலெழுதிய ஞான்று தமிழாசிரியர்க்குத் தெரியாதிருந்த தென்றே துணியப்படும். மற்றுப் பாணினி முனிவர் தாமியற்றிய அட்டாத்தியாயியில் தங்காலத்து வழங்கிய பல்லாயிரம் ஆரிய மொழிகளை யெல்லாம் பகுதி விகுதிகளாகப் பகுத்தாராய்ந்து அவற்றை யெல்லாம் தாதுபாதத்திற் சில்லாயிரம் பகுதிகளிலே அடக்கினார். தொல்காப்பியனார் பாணினி முனிவர் காலத்திலேனும், அல்லது அதற்குப் பின்னேனும் இருந்தனராயின் இலக்கண ஆராய்ச்சிக்கு இன்றியமையாப் பெருஞ் சிறப்பினதான சொல்வரலாற்று முறையைத் தவறாது கூறியிருப்பர். பாணினி முனிவர்க்குப் பிற்பட்ட காலத்திலிருந்தவரான பவணந்தியார் இச்சொல் வரலாற்று முறையைத் தமது நன்னூலில் தழுவிக் கூறினமை அறியவல்லார்க்கு யாம் உரைத்தது மிகவும் பொருத்தமுடைத்தாதல் இனிது விளங்கும். ஆகவே, சொல்வரலாற்று முறை தெரிந்துரைத்த பாணினி முனிவர்க்கும், அம்முறைதங் காலத்தில்லாமையால் அதனை உரையாது விடுத்த தொல்காப்பியனார்க்கும் இடைப்பட்ட காலம் மிகப்பெரிதாதல் வேண்டும். பாணினி முனி

வர்க்கு நானூறு வருடங்களின் முன்னே ஆசிரியர் தொல்காப்பியனார் இருந்தனர் என்று கொள்ளும்வழி, இற்றைக்கு மூவாயிரத்திருநூறுவருடங்களுக்குமுன் அவ்வாசிரியர் காலம் கணிக்கப்படுமென்று கொள்க.

இனி மற்றுமொரு வாற்றால் தொல்காப்பியனார் காலம் ஆயும் வழி அது நாலாயிர வருடங்களுக்கும் முற்பட்டதென்று நாட்டப்படும். தொல்காப்பியம் பஃறுளியாறு கடல் கொள்ளப்படு முன் எழுதப்பட்டது; அக்காலத்திற் குமரியாறு தென்றிசையில் ஓடிக் கொண்டிருந்தது. இது "வடவேங்கடந் தென்குமரி" என்னும் பனம்பாரனார் பாயிரவுரையானும், அதற்குரை கண்ட இளம் பூரணர் முதலான உரையாசிரியர் உரையானும் நன்குணரப்படும். இவ்யாறுகளும் இவற்றைச் சூழ்ந்த நிலங்களும் கடல் கொள்ளப்பட்டது இற்றைக்கு நாலாயிரத்து முந்நூறு வருடங்களின் முன்னென்றிலங்கைப் பௌத்த வமிசாவளியிலே குறிக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனங் குறிக்கப்பட்ட காலமும், விவிலிய நூலில் குறிக்கப்பட்ட நோவா என்பவர் காலமும் மிகவும் ஒத்திருக்கின்றன. எனவே, தொல்காப்பியனார் நாலாயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்னிருந்தாரென்று துணிந்து கூறுவாம்.

இனி இத்துணைப் பழைய காலத்தே எழுதப்பட்ட தொல்காப்பியம் என்னும் தமிழ்க் களஞ்சியத்தில் தொகுக்கப்பட்டுள்ள பொருள் நுட்பங்கள் ஈண்டு முற்றவும் எடுத்துக் காட்டல் எலாமையின், ஒவ்வோரதிகாரத்திலும் ஒன்றிரண்டு எடுத்துரைப்பாம். எழுத்ததிகாரத்தின் முதலிலேயே அவ்வாசிரியர் தமிழ் ஒலி எழுத்துக்களை முறையே நிறுத்திக் கூறிய திறம் பெரிதும் வியக்கற்பாலதாம். மூடி இருந்த வாயைத்திறந்த மாத்திரையானே அகர ஒலி இயற்கையாய்த் தோன்றுதலின் அதனை முன்னும், அதன்பின் இகரம் நாவாற் பிறத்தலின் அதனைப் பின்னும், அதன்பின் அவ்வோசை இதழ்வழியே உகரமாய்ச் சென்று அழிதலின் அதனை அதன் பின்னுமாக நிறுத்தி யருளினார். முற்பிறக்கும் ஓசை யெல்லாம் குறுகியிருக்குமாதலானும், அவ்வோசை பிற்கணத்திற் றொடர்பட்டு நீளுவதே நெடிலாமாதலானும் முன்னே அ, இ, உ என்னுங் குற்றெழுத்துக்களையும், அவற்றின் நீட்டமான ஆ, ஈ, ஊ என்பவற்றைப் பின்னுமாக வைத்தார். ஏனைய ஓசைகளின் முறையும் ஈண்

டுரைப்பிற் பெருகும். அவையெல்லாம் ஆசிரியர் நச்சினார்க்கினிய ருரையிற் காண்க. அற்றேல் அங்ஙனமாக, இவ்வெழுத்துமுறை வடமொழி முதலான பிறபாஷைகளினும் காணப்படுவதாக இத னைத் தமிழுக்கே வரைந்து சொல்லிய தென்னை யெனின்;—வட மொழியை ஒழித்து ஒழிந்த இந்திய பாஷைகளிலெல்லாம் காணப்ப டும் இம்முறை, தமிழ் ஆரியத்தின் முறைகண்டு செய்து கொள்ளப் பட்டதாகலின் அஃதீண்டு ஆராயற்பாற்றன்று. மற்றுவடமொழி யில் இம்முறை பண்டுதொட்டுக் காணப்படுதலின் அஃதொன்றே ஈண்டாராயற் பாலதாம். தமிழர் செய்த முறையைக் கண்டு ஆரி யர் தாம் அம்முறை காட்டினரோ, அல்லது ஆரியர் செய்த முறை யைக் கண்டு தமிழர் தாம் அது காட்டினரோ என்பது தான் ஈண்டு நிச்சயிக்கற் பாலதாம். ஆரியர் இவ்விந்தியா தேசத்திற் புகுமுன் னே அம்முறை கண்டறிந்தனராயின் அஃது அவர்க்கேஉரியதாகும்; அவர் இந்தியாவிற் புகுந்த பின் அங்கிருந்த தமிழர் அதனைப் பிரதி செய்து கொண்டாராவர். மற்று ஆரியர் இந்தியாவிற் புகுமுன் அம்முறை காணுதிருந்து புகுந்தபின் அதுகண்டனரென்று உரை நிறுவப்படுமாயின், தமிழர்க்கே அம்முறை உரியதாகு மென்பதும் அதனையே ஆரியர் பிரதி செய்து கொண்டன ரென்பதும் பெறப் படும்.

இனி ஆரியர் இந்தியாவிற் புகுமுன்னே அம்முறை அறிந்தா ரில்லை; அஃதறிந்தது உண்மையாயின் அவ்வாரியப் பிரிவினராய் ஐரோப்பாக் கண்டத்தின் தென்றிசை மேற்றிசை வடமேற் றிசை களிற் புகுந்த ஏனை ஆரிய சாதியார் வழங்கிய இலத்தின், கிரீக்கு, டியூடானிக், சிலாவிக் முதலிய ஆரிய பாஷைகளினும் அம்முறை காணப்படுதல்வேண்டும். அவற்றி லெல்லாம் உயிர் எழுத்து மெய் யெழுத்துக்கள் ஒருமுறையுமின்றிப் பலவாறு மயங்கிக்கிடத்தலின், அம்முறை ஆரிய பாஷைக் குரியதன்றென்பது அங்கையுள் நெல்லி போற் றெளியப்படும். மற்று அவ்வாரியர் இந்தியாவிற் புகுந்தபின் தமக்கு முன்னே அங்கு வாழ்ந்து வருந் தமிழ் ஆசிரியர் கண்ட அவ் வெழுத்து முறையைப் பிரதிசெய்து கொண்டார் என்க. இவ் வுண்மை பௌத்த இந்தியா என்னும் சரித்திரநூலில் இரைஸ் டேவிட்ஸ் பண்டிதராலும் நன்கு காட்டப்பட்டது. *

* Prof. Rhys Davids' Buddhist India, P. 156.

அதுகிடக்க. ஆரியபாஷை இலத்தீன் கிரீக்கு முதலிய வற்றோடு இனமுடைத்தாதல் யாங்ஙனமெனிற்காட்டுதும். ஒருபாஷை பிறிதொன்றனோடு இனமுடைத்தென்பது அவற்றின் முதலுற்பத்திச் சொற்களின் உருவொப்புமையால் நன்கு துணியப்படுமன்றே ஆரியத்தில் **சூநு** என்னுஞ்சொல் மகனைக் குறிக்கும். அவ்வாரியத்தோடு இனமான **ஸெண்ட்** என்னும் பாரசீக பாஷையிலும் அப்பொருளைக் குறிக்கும் அச்சொல் **ஹுநு** என்று வழங்குகின்றது; டியூடானிக் பாஷையில் **சுநு** எனவும் அவ்வாறே வழங்குகின்றது. ஆரியத்தில் மகளைக் குறிக்கும் **துகிதார்** என்னுஞ் சொல், ஸெண்டில் **துக்தர்** எனவும், கிரீக்கில் **துகாதீர்** எனவும், டியூடானிகில் **தோஹ்தர்** எனவும், சிலாவிகில் **துஸ்தேர்** எனவும்வழங்குகின்றது. ஆரியத்தில் உடன் பிறந்தானைக் குறிக்கும் **ப்ராதர்** என்பது,ஸெண்டில் **ப்ராதர்** எனவும், கிரீக்கில் **ப்ராதீர்** எனவும், இலத்தீனில் **வ்ராதேர்** எனவும், டியூடானிகில் **ப்ரோதர்** எனவும்,சிலாவிகில் **ப்ராதுந** எனவும், ஸெல்டிகில்**ப்ராதிர்** எனவும் வழங்குகின்றது. ஆரியத்தில் மாட்டைக் குறிக்கும் **பசூ** என்னுஞ் சொல், ஸெண்டில் **பசு** எனவும், இலத்தீனில் **பிகஸ்** எனவும், டியூடானிகில் **வைஹு** எனவும், சிலாவிகில் **பிகு** எனவும் வழங்குகின்றது. ஆரியத்தில் ஆட்டைக்குறிக்கும் **ஆவி** எனுஞ்சொல், கிரீக்கில் **ஒயீஸ்** எனவும், இலத்தீனில் **ஒவிஸ்** எனவும், டியூடானிகில் **அவி** எனவும், சிலாவிகில் **ஒவிகா** எனவும், ஸெல்டிகில் **ஒய்** எனவும் வழங்குகின்றது. ஆரியத்தில் பாம்பைக் குறிக்கும் **அகி** என்பது, ஸெண்டில் **அஷி** எனவும், கிரீக்கில் **எகிஸ்** எனவும், இலத்தீனில் **அங்குயிஸ்** எனவும்,டியூடானிகில் **அங்க்** எனவும், சிலாவிகில் **அங்கீஸ்** எனவும் வழங்குகின்றது. இன்னும் இவ்வாறே வருவன வெல்லாம் காட்டப்புகின் இவ்வுபந்யாசம் வரம்பின்றி மிக விரியுமென அஞ்சி இத்துணையே ஈண்டைக்குப் போதுமென நிறுத்துகின்றாம். இக்காட்டியவாற்றால் ஆரியபாஷை ஸெண்ட், கிரீக்கு, இலத்தீன் முதலான பாஷைகளோடு ஒற்றுமை யுடைத்தாதல் நன்கு தெளியப்படும். இனி ஆரியத்தில் வழங்கும் சூநு, துகிதார், ப்ராதர், பசூ, ஆவி, அகி என்னும் அச்சொற்களுக்குத், தமிழில் முறையே மகன், மகள், உடன்பிறந்தான், மாடு, ஆடு, பாம்பு என வழங்குஞ் சொற்கள் ஒருவாற்றானும் உரு வொப்புமை பெறாது நிற்றலும் ஈண்டு அறியற்பாலதாம்.

இனிக்கிரேக்கர், உரோமர், ஆங்கிலர், ஆரியர் முதலான ஆரியசாதியார் ஆரியர் இந்தியநாட்டிற் புகுமுன்னே ஓசைகள் பிறக்கும்முறை அறிந்து எழுத்துக்களை முன்பின்னாக நிறுத்தினராயின் அம்முறை அவ்வாரிய பாஷைகள் எல்லாவற்றிலுங் காணக் கிடக்கும். மற்று அம்முறை அவ்வாரிய பாஷைகளிற் காணப்படாமல் அகரத்தின் முன் பகரமும் அதன்பின் சகரமுமாக இங்ஙனம்ஒருமுறையுமின்றி நிறுத்தப்பட்டுக் கிடத்தலால், ஆரியர் அம்முறை முன் அறியாராய் இந்தியாவிற் புகுந்தபின் அறிந்தா ரென்பது இனிது நாட்டப்படும்.

இனி ஆரியர் வருதற்கு முன்னரே தமிழர் மிக்க நாகரிகமுடையரா யிருந்தனரென்பது இருக்குவேதத்தினாலேயே இனிது அறியப்பட்டதொன்றும். ஆரியர் சிந்து நதிக்கரையில் வந்து குடியேறிய காலத்தில், உள்நாட்டில் இருந்ததமிழர் எழுவகை அரண்மனைகளும், தொண்ணூறு கோட்டைகளும் உடையராய் வாழ்ந்தனரென இருக்குவேதம் * உரைதருகின்றது. இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளின் முன்னரே தமிழர் அழகிற் சிறந்த எழுநிலை மாடங்களும், உயர்ந்த கற்கோட்டைகளும் கட்டுவித்து வாழ்ந்தனராயின், அவ்வரிய பெரிய கட்டிடங்கள் அமைப்பதற்கு இன்றியமையாப் பெருஞ் செல்வவளமும், அவை தம்மைத் திருத்தமுறக் கட்டுவித்து முடிப்பதற்கு உரிய நூல் உணர்வும், அவற்றுள் நடத்தப்படும் பலதிறப்பட்ட இலௌகிக கருமங்களும் உடையராய் இருந்தாராதல் தெற்றெனத் துணியப்படும். இத்துணைப்பெரியநாகரிகவாழ்க்கைஉடையராயிருந்த தமிழர்தமது நாகரிக வாழ்க்கைஇனிதுநடைபெறுதற்கு இன்றியமையாதுவேண்டப்படும் தமிழ்ப்பாஷையினை இலக்கண இலக்கிய அமைதியோடு முற்றக் கற்று வந்தா ரென்பதூஉம் இதனாற் ரூபிக்கப்படும் முடிபொருளாம். ஆகவே, ஓரிடத்தும் நிலைபெறமாட்டாது திரிதரு வாழ்க்கை யுடையராய் இந்தியாவினுட் புகுந்த ஆரியர் கங்கை யாற்றுக் கரைப் பக்கங்களில் நிலைபெற்ற வாழ்க்கை நடாத்திச் செங்கோல் ஓச்சிய தமிழ் மக்களால் நெறிப்படுத்தப் பட்ட இலக்கண முறைகண்டு தாமும் உயிர்மெய் எழுத்துக்களை முறைப்படுத்தினரென்று துணிக.

* Vide Pandit. Saviriroyan's excellent article on 'The Admixture of Aryan with Tamilian'—The Light of Truth.

ER TAMIL S

ஆரியர் வருமுன்று, தமிழர் அரசியல் முறைபிழையாது வாழ்ந்தனராகலின் அவரை ஆரியர் 'அசுரர்' என்று பெயரிட்டுவழங்கினர். இருக்குவேதத்தின் முதல் ஒன்பது மண்டிலங்கள் முழுவதூஉம் 'அசுர' என்னுஞ் சொல் 'வலிய' அல்லது 'அதிகாரமுடைய' என்னும் பொருளில் உரிச்சொல்லாய் வழங்கப்பட்டு வருகின்ற தென்றும், 'அசுரர்' என்பதற்கு அதனல் 'தலைவர்' என்னும் பொருள் பெறப்படுகின்ற தென்றும்உரோமேஷ் சந்திரதத்தரும்இனிது விளக்கினர். 'ஞிமிறு' என்பது 'மிஞிறு' எனவும், 'தசை' என்பது 'சதை' எனவும், 'விசிறி' என்பது 'சிவிறி' எனவும் எழுத்து நிலை மாறி வருதல்போல 'அரசு' என்னுந் தமிழ்ச்சொல் 'அசுர' என நிலை மாறி இருக்குவேதத்துள் வழங்கப்படுவதாயிற்று.* தமக்கு எதிரே நாகரிகம் நிரம்பி விளங்குகின்ற தமிழ அரசரைத் தமக்குந் தலைவராக ஒருப்பட்டுப் பண்டை ஆரியமக்கள் அசுரர் என வழங்கினர். பிற்காலத்து வடமொழியில் மாத்திரம் 'அசுரர்' என்னும் அச்சொல்லின் உயர்ச்சிப்பொருளைமாற்றி அதற்கு அரக்கரெனப் பொருள் கட்டி விட்டார்கள். மற்று இருக்குவேதமோ அரசியல் நெறி திறம்பாத தமிழரசரைச் சுட்டி 'அசுரர்' என மிகவும் பாராட்டி வழங்கியது. இத்தமிழரசர் தங்கீழ் வாழ்வார்க்கெல்லாம் மிக இனியராய் ஒழுகியதுபற்றி, இவர்க்கும் இவர் குடும்பத்தார்க்கும் **அரசினியர்** என்னும் பெயர் வழங்குவதாயிற்று. 'அரசினியர்' என்னும் இச்சொற்றொடரையே இருக்குவேதகாலத்து ஆரியமக்கள் 'ராஜந்யர்' எனத் தமக்கேற்றவாறு திரித்து வழங்கினர். அரசினியார் எனப்படும் பண்டைக்காலத்தமிழரசர் நுண்ணறிவு நூலுணர்ச்சியாற் றத்துவங்கள் பலவும் ஆய்ந்து முடிபொருட் டேர்ச்சியுற்று விளங்கினரென்பதூஉம் அப்பழைய ஆரிய நூலாற் பெறப்படும் உண்மையாம். இதனைப் பின்னே விரித்து விளக்குவாம்.

இனி இதுவேயுமன்றித்தமிழ் மக்கள் தாம் உரையாடுங்காற் றோன்றும் ஓசைகளைப் பல்வகை எழுத்துக்களால் இட்டெழுதிப்பண்டே நாகரிக முதிர்ச்சி உடையராயு மிருந்தனர். ஆரியரோ தம்பாற் பிறந்த ஓசைகளை எழுத்திலிட்டுக் காட்டும் வகை அறியாமையினுல், தம்

---

* Compare Pandit Saviriroyan's able and admirable article on the Aryan Admixture with the Tamilian.

முன்னோராற் பாடப்பட்ட பாட்டுக்களை நெட்டுருப் பண்ணுதற்குக் கிடைகூட்டிப் பயின்று வந்தார். அவ்வழக்கம் இன்றும் பலர் ஒருங்கு கூடியிருந்து வேதம் ஓதுமாற்றால் நன்கு அறியப்படும். இங்ஙனம் எழுத்துக்களின்றி வெறும் ஓசை மாத்திரையாய் வேதங்கள் அவராற் பயிலப்பட்டு வந்தமையாலன்றே அவை 'எழுதாக்கிளவி' என்று பெயர் பெறுவனவாயின. அல்லதூஉம், வடமொழிக்கென்றே ஒரெழுத்து இல்லாமையினாலேதான், வடநாடுகளிலுள்ளார் மகாராட்டிரத்திற்குரிய தேவநாகர எழுத்துக்களானும், தென்னாடுகளிலுள்ளார் தமிழுக்குரிய கிரந்தாக்கரங்களாலும், ஆந்திரநாட்டிலுள்ளார் தெலுங்கிற்குரிய தெலுங்கெழுத்துக்களானும் வடநூல்களை எழுதுதலும் பதிப்பித்தலுஞ் செய்து போதலுகின்றார். பண்டைநாள் ஆரியர் எழுத்தறியாமையின் தம்முடைய பழையநூல்களைப் பாதுகாத்து வழங்கற் பொருட்டுத் திருத்தமாக அவற்றை ஓதுதற்குரிய முறைகளை எல்லாம் பிராதிசாக்கியங்களில் மிகவிரித்தெழுதினார். எழுத்தறிந்தனராயின் அவ்வாறெல்லாம் அவற்றை ஓதுதற்குரிய முறைகளை மிகவருந்தி விரித்தெழுதல்வேண்டப்படாதென்க. நினைக்கப்படுவது என்னும் பொருளையுடைய ஸ்மிருதி என்னுஞ் சொல்லும் கேட்கப்படுவது என்னும் பொருளையுடைய சுருதி என்னுஞ் சொல்லும் அவ்வடநூல்களுக்குப் பெயராய் அமைந்ததனை உற்றுநோக்குமிடத்து அவைநினைக்கப்பட்டுங்கேட்கப்பட்டும்வந்தனவேயல்லது எழுத்திலிட்டு எழுதப்படவில்லை யென்பது போதரும்.

இனி ஆரியர் இந்தியாவிற் புகுந்தபின் தமிழருடைய நாகரிக முதிர்ச்சியினையும், அவர் தாங்கருதிய பொருளை எழுத்திலிட்டுப் பொறித்தலுங்கண்டு தாமும் தம்முடைய பாட்டுக்களைப் பண்அடைவுபட வகுத்தனொன்று எழுதுமுறை கண்டறிந்தார். இது கோல்ட்ஸ்டக்கர் என்னும் பண்டிதர் விளக்குமாற்றானும் நன்குஅறியப்படும். இரைஸ்டேவிட்ஸ் பண்டிதரும் 'இந்தியாவினுள்ள எழுத்துக்கள் ஆரியர்க்குரியவல்ல'வென்றும் 'அவை திராவிட வியாபாரிகளாற் கொண்டுவந்து தரப்பட்டன' வென்றும் கூறுமாற்றானும் * அவை தமிழர்க்கே உரியவென்பது இனிது பெறப்படும்.

---

* "All the present available evidence tends to show that the Indian alphabet is not Aryan at all; that it was introduced into india by Dravidian merchants;"—Buddhist India, P. 119.

இனிச் சரித்திரநூற் பண்டிதரில் ஒருசாரார் பினீசியரென்னும் நாகரிகசாதியாரோடு வாணிகம் நடாத்திய தமிழர் அவரிடமிருந்து எழுதுமுறை கற்றுப்பின் அதனை இந்தியாவெங்கும் பரப்பினர் எனக் கூறுகின்றார். இவருரைக்கும் இவ்வுரையோடு யாம் ஒருவாற்றால் இணங்குதலும் பிறிதொருவாற்றால் இணங்காமையும் உடையோம். யாங்ஙனமெனிற் காட்டுதும்.

இற்றைக்கு மூவாயிர வருடங்களின் முன் மேற்றிசையிலுள்ள பினீசியர் என்னுஞ் சாதியார் தென்னிந்தியாவின் மேற்கே மலையாளக் கரையினும், கிழக்கே உவரி கொற்கை என்னுங் கடற்றுறைப் பட்டினங்களினும் வந்திறங்கித் தமிழரோடு வாணிகம் நடாத்தினர். அவர் தம் நாட்டுக்குத் திரும்பிப்போம்போது யானைக் கொம்புகள், தோகைமயில்கள், குரங்குகள், சந்தனக்கட்டைகள், விலை உயர்ந்த முத்துகள், அரிசி, கருவாப்பட்டை முதலிய சரக்குகளை ஏற்றிக் கொண்டுபோயினர். அவர்கள் சாலமன் என்னும் மேல்நாட்டரசன் காலத்திற் கூட்டங் கூட்டமாய் வந்தனரென்று ஈபுருபாஷையில் எழுதப்பட்ட விவிலியநூலால் நன்கறிகின்றோம். அந்நூலில் தமிழ்நாட்டுக் கடற்றுறைப் பட்டினமான உவரி என்பது ஒபிர் * எனவும், அவர் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றிக் கொண்டுபோன பொருள்களான மயில், சந்தனம், அரிசிஎன்பவற்றின் பெயர்கள் தோகை, அனுகம், அரிசி எனவும் அவ்விவிலிய நூலில்எழுதப்பட்டிருக்கின்றன. † சாலமன் என்னும் வேந்தன் இற்றைக்கு மூவாயிர வருடங்களின் முன் செங்கோலோச்சினனென்பது சரித்திரநூற் பண்டிதர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தமையின், அவன் காலத்தில் தமிழ் நாடுபோந்து தமிழரோடு வாணிகம் நடாத்திய பினீசியர் தாம் உபயோகித்துவந்த எழுதுமுறையைத் தமிழர்க்குங் கற்பித்தார். ஆயின், தமிழர் அவர் வருதற்குமுன் எழுதுமுறை அறியாரோவெனின்; அற்றன்று. பினீசியர் வருதற்கு முன்னுந் தமிழர் அம்முறை நன்றறிந்தார் என்பது தேற்றமாம். யாங்ஙனமெனிற் காட்டுதும். ஆசிரியர் தொல்காப்பியனார் 'எழுத்ததிகாரம்' என ஒன்று வகுத்துக்கொண்டு எழுத்துக்களின் இலக்கணத்தைச் செவ்வனே கூறுகின்றமையானும், எழுத்துக்கள் இல்லாவிடின் அங்ஙனமெல்லாம்இலக்கணங் கூறுதல் ஆகாமையானும் "உட்பெறுபுள்ளியுருவாகும்மே" என்னுஞ்

---

* Ophir † Max Muller's Science of Language, 1st vol.

சூத்திரத்தில் மகர எழுத்து முன்னாளில் எழுதப்பட்டவரிவடிவும், "மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்" என்னுஞ் சூத்திரத்தில் மெய்யெழுத்துக்கள் புள்ளிபெற்று நிற்றலும், "எகர ஒகரத் தியற்கையுமற்றே" என்பதனால் எகர ஒகர எழுத்துக்களும் அவ்வாறேபண்டைநாளில் புள்ளி பெற்றுநின்றமையும், "புள்ளி யில்லா எல்லாமெய்யும், உருவுருவாகி அகரமோடு உயிர்த்தலும், ஏனைஉயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும், ஆயீரியல உயிர்த்தலாறே" என்பதன் கண் மெய்யெழுத்துக்கள் உயிர்களோடு கூடியவழிவரிவடிவில்உருவு திரிதலும் இனிதெடுத்து ஓதினாராகலானும், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் "உருவுதிரிந்துயிர்த்தலாவது மேலுங் கீழும் விலங்கு பெற்றுங் கோடுபெற்றும் புள்ளிபெற்றும் புள்ளியுங்கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம். கிகீ முதலியன மேல் விலங்குபெற்றன. கு கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடுபெற்றன. கா ஙா முதலியன புள்ளிபெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம் உட்பெறு புள்ளியை வளைத் தெழுதினர். கொ கோ ஙொ ஙோ முதலியனபுள்ளியுங் கோடும் உடன் பெற்றன" என்று உரை விரித்துக் கூறுதலானும் தமிழர் தமக்கென வேறெழுத்துடையரா யிருந்தனரென்பது துணிபொருளாம்.

அற்றேல், பினீசியரால் தரப்பட்ட எழுத்துக்களுக்கும் தமிழர்க்கேஉரிய எழுத்துக்களுக்கும் வேறுபாடு என்னைஎனின்;—பினீசியர்க்குரிய எழுத்துக்களெல்லாம் வலதுகைப்புறத்திலிருந்து இடதுகைப்பக்கமாய் எழுதப்படுவனவாம்; * தமிழர்க்குரியனவோ இடதுகைப்புறத்திருந்து வலதுபக்கமாய் எழுதப்படுவனவாம் இவ்வேறுபாட்டுடன், அவர்கொண்டுவந்தன உருவத்தானும் தமிழ்எழுத்துக்களின்வேறுவனவாம். எகுபதிநாட்டில் எழுப்பியதூபிகளின்மேற் பொறிக்கப்பட்டிருக்கும் சித்திர எழுத்துக்களினின்றுந் திரித்துச் செய்துகொண்டனதாம் பினீசியர்க்குரியஎழுத்துக்கள்;மற்றுத்தமிழ் எழுத்துக்களோவெனின், அக்கடியர் என்னுஞ்சாதியார் பல்லாயிரமாண்டுகளின் முன்னேவழங்கிய முளைஎழுத்துக் † களினின்றுந் தோன்றி நடைபெறுவனவாம். அக்கடியர் என்னுஞ்சாதியாரும்

* Buddhist India, P. 114. † Cuneiform letters.

பண்டைக்காலத்தமிழரும் ஒருவரேயென்பது **ஸ்ரீமான் பண்டிதர் சவரிராய** ரவர்களாற் 'சித்தாந்ததீபிகை' யில் இனிதுவிளக்கப்பட்டது, அதன்விரிவு பின்னேகாட்டுதும்.

இனிப் பௌத்தசமயம்விளக்கிய அசோகமன்னன் காலத்திற் செதுக்கப்பட்ட கல்வெட்டெழுத்துக்கள் இருவகைப்படுகின்றன. ஒன்று வலதுபுறத்திருந்து இடதுபக்கமாயும், ஒன்று இடதுபுறத்திருந்து வலதுபக்கமாயும் எழுதப்பட்டிருக்கின்றன. * முன்னையது கபுர்த்தகிரிச்சிலா சாதனங்களிற் காணப்படுகின்றது; இது வட அசோகலிபி என்றுசொல்லப்படும். பின்னையது அசோகவேந்தன் கல்வெட்டுக்கள் பெரும்பாலவற்றிலுங் காணப்படுகின்றது; இது தென்அசோக லிபிஎன்றுசொல்லப்படும். வடஅசோகலிபி இந்தியாவின்வடமேற்குப்பாகங்களில்மாத்திரம்அருகிவழங்குகின்றது. தென் அசோகலிபி இந்தியாவிற் பெரும்பாலும் எங்கும்வழங்குகின்றது. ஆகையால், தென் அசோகலிபி இந்தியாவிலேயே பிறந்த எழுத்துக்களாகுமென்பது நன்கு பெறப்படும். என்னை ? புறநாட்டிலிருந்து வந்த எழுத்துகள் இந்தியாவிலுள்ள இந்திய மக்கள் எல்லார்க்கும் விளங்காமையின் அவை அப்புறநாட்டை யடுத்த இந்திய எல்லையின் மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டன ; உள்நாட் டெழுத்துக்கள் யார்க்கும் புலப்படுமாதலால் அவை இந்தியா வெங்கும் உபயோகப் படுத்தப்பட்டு வந்தன. இங்ஙனம், தென் அசோகலிபி இந்தியாவிற்கே உரியதென்பதனை இவ்வியல்பு முற்றவும் ஆராய்ந்த **தாமஸ், கன்னிங்காம்** என்னுஞ் சிலாபரிசோதன பண்டிதர் இருவரும் நன்குவிளக்கினர்.

இனித் தென் அசோகலிபி என்பது தமிழ் வட்டெழுத்துக்களின் திரிபேயன்றி வேறென்று கூறுதல் ஆகாமையால், அது தமிழர்க்கே உரிய எழுத்தாமென்று நாட்டப்படும். வட அசோக லிபியும் தமிழர் வழியாய்ப் பெறப்பட்ட பினீசியர் எழுத்தேயல்லதுபிறிதில்லை. இவ்வாறு எழுத்துக்களின் இருவகைப்பாகுபாடும் பொருந்தக் காட்டப்பட்டமையால் இந்தியாவில் வழங்கப்படும் எழுத்துப் பினீசியரிடமிருந்து போந்ததென்று உரைப்பார் உரையும், அற்றன்று அஃது இந்தியாவிலேயே பிறந்து வழங்குகின்றதென் றுரைப்

* R. C. Dutt's Ancient India, P. 24, 2nd vol.

பார்உரையும் தம்முள்முரணுமைகாண்க. பினீசியரிடமிருந்துபோந்த தெல்லாம் இந்தியவடமேற்கெல்லையில் அருகிவழங்கும் வடஅசோக லிபியேயாகுமென்பதூஉம் இந்தியாவிலேயே தோன்றிப்பண்டு தொட்டுநடைபெறுவது தமிழவட்டெழுத்தின் திரிபானதென்ன சோகலிபியேயாகுமென்பதூஉம்பாகுபடுத்துவிளங்க உணர்தல்சரித் திரநூல்வல்லார்க்கு இன்றியமையாதகடமையாம். இவ்வுண்மை தேருது அவையிரண்டனையும் ஒன்றெனக்கூறி முடிபுரைத்தல்ஒரு சிறிதும் பொருந்தாதென்க.

இனி ஆசிரியர் தொல்காப்பியனுர் சொல்லதிகார முதலிலே யே உலகியற்பொருள்களை உயர்திணை யென்றும் அஃறிணை யென் றும் பகுத்தோதினுர். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம் பொறி யுணர்வோடு இவற்றைப் பகுத்துணர்கின்ற மனவறிவும் உடைய உயிர்களெல்லாம் மக்களெனப்படுவர் என்றும், இம்மக்களே உயர்திணை யாவரென்றும், ஐம்பொறி உணர்வு மாத்திரம் உடைய விலங்கு புள் முதலியனவும் உயிரில்லாத ஏனைச் சடப்பொருளுமா கிய எல்லாம் அஃறிணையாமென்றும் இனிது விளக்கிச் சூத்திரஞ் செய்தருளினுர். ஆண் பெண் என்னும் பாற் பகுப்பும் உயர்திணை யில் மாத்திரம் தெற்றென விளங்குதலின் அப்பாகுபாடும் உயர்தி ணைக்கே கூறி, ஏனை அஃறிணையில் உயிருள்ள எறும்பு முதலியவற் றுள் அப்பகுப்பு அவ்வாறு விளங்காமையின் அதற்கது கூருராய் விடுத்தனர். எம் அரிய நேசர்காள்! இப்பாகுபாட்டின் அருமையும் நுட்பமும் நாமுணராதிருக்கின்றேம். பிற பாஷைகளில் எங்காயி னும் இத்தகைய நுண்பகுப்பு உளதா என்று ஆராய்வோமாயின் அப் போது இதன் பெருமை நன்கு தெளியக் கிடக்கும். ஆங்கில முத லான மேல் நாட்டுப் பாஷையிலெழுதப்பட்ட இலக்கணநூல்களை இடைவிடாது எழுத்தெழுத்தாய் ஆராய்ந்து பார்ப்பினும் அவற்றின் கண் இவ்வரிய பெரிய இலக்கணப் பாகுபாடு ஒரு சிறிதுங் காணப் படாது; அன்றி இந்தியநாட்டிற் பிரபலமொழியாய்ப் பயிலப்படும் சமஸ்கிருதத்திலேனும் இம்முறையுண்டோ வெனின் ஆண்டும் இத னைக்காணேம். இஃதொன்றே, அச்சமஸ்கிருத பாஷையிலுள்ள சொற்பொருட் பாகுபாடுகள் நுண்ணறிவிற்குச் சிறிதும் இயையா வாறுய் அமைந்து கிடக்கின்றன. 'இல்லம்' 'வீடு' என்பன உயிரில் லாத அஃறிணைப் பொருள்களென்பதும், அவைதம்மை ஆண்பெண்

என் வழங்கல் நகையாடுதற் கேதுவா மென்பதுஞ் சிறுமகாரும் அறிவர். இங்ஙனமாகவும், சமஸ்கிருதத்தில் 'ஆலயம்' என்னுஞ் சொல் ஆண்பாலாகச் சொல்லப்படுகின்றது; 'சாலை' என்பது பெண்பாலென்று சொல்லப்படுகின்றது. மயிர்க்கற்றை என்னும் பொருளுடைய 'கபரீ' என்பது பெண்பாலாம், 'கேசவேச' என்பது ஆண்பாலாம்; விருப்பம் என்று பொருள்படும் 'இச்சா' என்பது பெண்பாலாம், 'மனோரத' என்பது ஆண்பாலாம்; மாலைப்பொழுது என்று பொருள்படும் 'திநாந்த' என்னும் ஒரு சொல் ஆண்பாலாம் 'சந்த்யா' என்னும் மற்றொரு சொல் பெண்பாலாம்; உலகம் என்று பொருள்படும் 'ஜகதோ' என்பது பெண்பாலாம் 'லோக' என்பது ஆண்பாலாம்; சுவர் என்று பொருள்படும் 'பித்தி' என்பது பெண்பாலாம் 'குட்ய' என்பது அலிப்பாலாம்; காது என்று பொருள்படும் 'கர்ண' என்பது ஆண்பாலாம், 'ஸ்ருதி' என்பது பெண்பாலாம், 'ச்ரவண' என்பது அலிப்பாலாம். நண்பர்காள்! ஈதென்ன புதுமை பாருங்கள்! சடப்பொருளான இவையெல்லாம் ஆண் பெண் எனக் கூறினால் யாருக்குத்தான் நகைவிளையாது. இவ்வாறு சொற்களை ஒருவரன்முறையு மின்றித் தோன்றியவாறு ஆண்பெண் எனக்கூறி, அவை தம்மை வாக்கியங்களில் இயைத்துக் கூறுங்கால் ஆண்பெயர்க் கேற்ப ஆண்வினையும் பெண்பெயர்க்கேற்பப் பெண் வினையும் கூட்டி யுரைக்கவென விதித்தால் இவை தம்மை அறிவுடையோர் கற்கமுந்துவரா? வேறு பாஷை தெரிதற்கு வழியின்றி ஆரியத்திற் பிறந்து இடர்ப்படுவாரே அதனைக் கற்றற்கு உரியார். பொருள் வகையால் ஈது உயர்திணை ஈது அஃறிணை யென்று வகுத்தால் பொருட் கேற்பச் சொற்களை வழங்குதலில் யார்க்கும் இடர்ப்பாடு தோன்றாது. பொருள் வகையால் அஃறிணை யென்றே உலகத்திற்கு ஒப்பமுடிந்த ஒரு சொல்லை ஒருகால் ஆணாகவும் ஒருகாற் பெண்ணாகவும் ஒருகால் அலியாகவும் கூறல் வேண்டுமென ஒருமுறையுமின்றி விதித்தால், இச்சொற்களை ஆராய்ந்து இவை ஆண் இவை பெண் இவை அலி என நிச்சயஞ் செய்தலிலேயே மாணாக்கர்க்கு ஆயுள் கழியும். இனி இவற்றாற் பெறப்படும் பொருளை யுணர்ந்து அதனை உரிமை கோடற்கு ஆயுள் எங்கே உளது? சில்வாழ்நாட்பல்பிணிச் சிற்றறிவினரான மக்கள் தம்முயிர்க்குறுதி பயக்கும் உண்மைப்பொருளை உணர்தற்கு ஒரு கருவியாயமைந்த பாஷை கற்றற்கும் பயன்படுத்தற்கும் இலேசாக இருத்தல்வேண்டுமே யல்லது,

கடினபதமுடைத்தாதல் பயனின்றும். கருவியே பெரிதிடர் பயப்பதாயின் அதனாற் பெறப்படும் பொருள் சித்திதருவ தியாண்டுமில்லை யென்க. இத்துணைக் கடினச் செவ்வி யுடைமையினாலன்றோ சமஸ்கிருத பாஷை உலக வழக்கின்றி இறந்தொழிந்தது. திருஞானசம்பந்தப் பெருமான் முதலான அருட் டிருவாளரும் முழுமுதற் கடவுளை வழிபட் டெய்தற்குரிய இலேசான நெறியைச் செந்தமிழ்த் திருப்பாட்டுக்களிலே அருளிச் செய்வாராயினர். இப்பெற்றி இனிதுதேர்ந்தே

"கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலாமொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும்படுமோ" என்று திருவிளையாடற் புராண முடையாருங் கூறினார்.

செந்தமிழ் நண்பர்காள்! இற்றைக்கு நாலாயிரத்து முந்நூறு வருடங்களின் முன்னரே தமிழ் மக்களும் தமிழ் இலக்கண ஆசிரியரும் உயர்திணை அஃறிணைப் பாகுபாடு பொருள் வகையால் இயற்கைநெறி திறம்பாதே உணர்ந்து அறிவுடையார் எல்லார்க்கும் ஒப்ப முடிவதாக விளக்கிய அரிய நுண்ணறிவாற்றல் நுங்களாற்பெரிதும் போற்றற் பாலதேயாம். இன்னோ ரன்னவற்றை இதுகாறுஞ் சாமானியமாய் நினைத்து வந்ததுபோல் நினையன்மின்! பண்டைத் தமிழ் நூல்களிற் சொல்லப்பட்ட ஒவ்வொரு பொருளும் கிடைத்தற்கரிய முழுமாணிக்கங்களாமென்று தேர்மின்கள்! இவ்வரும் பெறல் மாணிக்கங்களெல்லாம் வரன்முறையே தொகுத்த தொல்காப்பியம் விலை வரம்பு அறியாக் களஞ்சியம் என்று ஆராய்ந்து வியப்பெய்துமின்கள்!

இனி, நீர் வேட்டுச் செல்கின்றான் ஒருவன் நறுமணங் கமழும் இளமரக்காவின் இடையிடையேதங்கி அயர்வு சிறிது ஒழிந்து முப்பழச் சாறுந் தேனும் விரசினாற்போற் சுவைக்குந் தெண்ணீர் நிரம்பிய நீர்நிலையிற்சென்று நீர் ஆரப்பருகி வேட்கையொழிந்து அயர்வு முற்றும் நீங்கினாற்போல, ஆசிரியர் தொல்காப்பியனார் திருவாய்மலர்ந்தருளிய எழுத்ததிகார சொல்லதிகாரங்களி னிடையே தங்கி தமிழ்ப்பெருமை தெரியா அறியாமை சிறிது சிறிதேஒழிந்து இப்போது பொருளதிகாரத்திற்சென்று ஆண்டுவிரிந்த நுண்பொருட்டொகுதி

யில் ஒன்றிரண்டு நுகர்ந்து எமதறியாமை முற்றும் போக்குவாம். நண்பர்காள்! ஆசிரியர் பொருளை அகம் புறம் எனப்பகுத்த முறையே பெரிதும் நுண்ணறிவு நிறைந்ததாம். ஆன்மாக்களின் அறிவு நிகழ்ச்சியே அகம் புறம் என இருதிறப்படுகின்றன. ஆன்மாவினுள் நிகழும் அறிவு அவ்வான்மாவிற்கே புலனுவதாம். ஆன்மாவிற்கு ஒரு சரீரம் படைக்கப்படா முன்னெல்லாம் அதன் அறிவு புலப்பட்டு நிகழாதாய்ச் செயலின்றி மழுங்கிக்கிடந்தது. இனி அவ்வறிவு அங்ஙனம் மழுங்கிக்கிடக்க வொட்டாது அதனை எழுப்பி விரிவு செய்தற்பொருட்டு அதற்கொரு சரீரம் தரப்பட்டதாகலின், ஆன்ம உள்ளறிவு புறப்பொருளோடு இயைந்துநின்று அம்முறையே பெருகுதற்கு இவ்வுடம்பு இடைநின்று உபகரிப்பதொன்றும். இதனுல், அகம், நடு, புறம் என்னும் மூவகை பெறப்படுகின்றன. அகம் அறிவு, நடு உடம்பு, புறம் பொருள் என ஆகும். கண் ஒருபொருளைக் காண்டற்கு ஞாயிறு விளக்கமாய் இடைநின்று காட்டுதல்போல உயிரறிவு புறப்பொருளைப் பற்றுதற்கு உடம்பு ஒரு விளக்காமென்க. இதுபற்றியே மெய்கண்ட தேவர் "மாயா தனுவிளக்கா மற்றுள்ளங்காணு தேல், ஆயாதா மொன்றை" என் றருளிச் செய்தார். இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்குணமுஞ் சூக்குமரூபமாய் இவ்வுடம்பிற் பொருந்திக் கிடக்கின்றன; இவற்றேடு வேறற ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற உயிரறிவு அவற்றுல் இன்ப துன்பநுகர்ந்து அறியாமை நீங்கி விளக்கமுடையதாகின்றது. வெளியே தோன்றும் எல்லாப் பொருட்குணங்களும் இச்சரீரமென்னும் பளிக்குப்பாறையிலே பிரதிபலிக்கின்றனவாகலின் இதன் நடுவில் வசிக்கின்ற உயிரறிவு இவையனைத்தையும் உணரவல்லதாகின்றது. ஆகவே அகத்தேதோன்றும் ஆன்மாவின் அறிவொழுக்கங்களெல்லாம், புறத்தே அவற்றை எழுப்புதற்குக் காரணமாயுள்ள பொருட்பாகுபாட்டுடன் பொருந்தியேயிருக்கும். இந்நுட்பமெல்லாம் முற்றவும் அறிந்த ஆசிரியர் அகவொழுக்கத்தைக் கைக்கிளைமுதற் பெருந்திணை இறுதியாக எழுகூறுகப்பிரித்தார்; அங்ஙனம் பிரித்ததற் கேற்பவே அவற்றேடு ஒற்றுமையுடைய புறப்பொருளையும் எழுகூறுக்கினர்.

இனி ஒருயிர் பிறிதோர் உயிரோடு பொருந்தும்வழிப் பிறக்கும் இன்பதுன்ப நுகர்ச்சி யெல்லாம் ஆசிரியர் ஒருங்கே விளக்கி யுரைக்கும் திறம் மிகப்பெரிது. இவர்போல் ஆன்ம இயற்கை முழுதுணர்ந்து உரைத்த வேறு புலவர் ஆங்கிலபாஷை வல்ல ஷேக்ஸ்பியர்

ஒருவரேயாம். அகத்தே தோன்றும் அவ்வின்பதுன்ப நிகழ்ச்சிக் கேற்ற இடம்பொழுது முதலாக ஆசிரியரான் ஆராய்ந்துரைக்கப் பட்டனவெல்லாம் இன்று காறும் உலக இயற்கை பிழையாது வரு கின்றன. இங்ஙனம் உலக இயற்கை முழுதுணர்ந் திலக்கணமுரை த்த ஆசிரியரை வேறு எத்தேயத்தினும் எந்தமொழியினுங் காண்டல் அரிது அரிது.

இனி ஆன்மாவின் அகத்தே தோன்றும் உணர்வு நிகழ்ச்சிகளெ ல்லாம் இவ்வுடம்பின் புறத்தே முகத்திற் றோன்றுமென்பது 'மெய் ப்பாட்டியலில்' வரம்பு செய்துரைக்கப்பட்டது. இன்னும் அம்முக த்திற் கண்களிலேயே அக நிகழ்ச்சி முழுது முணரப்படுமென்று விளக்கி

"நாட்டமிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்." என்று கட்டளை

யிட்டருளினர். தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் இதனை விசே டித்துக் கூறுமாறு காண்க. உரிமை நேசர்காள்! உலக இயற்கை ஆன்ம இயற்கை யெல்லாம் இங்ஙனம் வரைசெய்து இலக்கணமெழு திய ஆசிரியர் தொல்காப்பியனாரை ஒத்த ஆசிரியரையாயினும், அல் லதவர் அருளிச்செய்த தொல்காப்பியம் போன்ற பிறிதொரு நூலை யாயினும் இற்றைக்கு நாலாயிர வருடங்களின் முன் நாகரிகமெய் திய எத்தேசத்திலாயினும் எப்பாஷையிலாயினுங் காட்டுதல்கூடுமோ? நடுநிலை திறம்பா துரைமின்கள்!

இனி இவ்வுலகத்தின் உள்ளும் புறம்புமாய் நின்று அறியவல் லதை அறிவித்தும் அசைய வல்லதை அசைவித்தும் பேரொளிப் பிழம்பாய் அருவாய் அறிவாய் இன்பமாய் விளங்கும் முழுமுதற் கட வுள் நிலையைச் சுட்டி ஆசிரியர் தொல்காப்பியனார் இற்றைக்கு நாலா யிர வருடங்களின் முன்னே நிறுவியபொருட் டிட்பத்தை அதேகால த்திற் றோன்றிய ஆரிய சாதியார் நூல்களிற் சொல்லிய தெய்வநிலை யோடு ஒப்பிட்டுக் காண்போமாயின் தமிழரது பண்டைக்கால நாக ரிக வளம் மேலும் மிக்குவிளங்கும்.

ஆசிரியர் "கொடிநிலை கந்தழிவள்ளி" என்ற சூத்திரத்தில் 'கந் தழி' என்னும் முழுமுதற் பரம்பொருள் 'ஒரு பற்று மற்று அருவா ய்த்தானே நிற்குந் தத்துவங் கடந்தபொருள்' என்று வலியுறுத்தார்.

இஃததற்குரைகண்ட நச்சினார்க் கினியர் கூறுமாற்றான் நன்கு பெற ப்படும். இதனாற் கந்தழி எனப்படுங் கடவுள் சித்து சடம் என்னும் இருவகை யுலகினுள்ளும் ஒன்றன்றாய் இவை தம்மையெல்லாம் முற் றும் வியாபித்துக்கொண்டு எவ்வகைப்பற்றுமின்றி நிலைபெறும் பேரி ன்ப நிலையமென்பது பெற்றாம். அத்துணைப் பழைய காலத்தே கட வுட்டன்மையினை இவ்வாறுணர்ந் துரைத்தவர் உலகில் வேறு யா ண்டுங் காணப்படார். மிகவும் பழைய நூலான இருக்குவேதத்தை ஆராய்ந்து பார்மின்! இருக்குவேத காலத்து ஆரியர் ஒளியுடைப் பொருளையும் அவற்றோடு சம்பந்தமுடையவற்றையும் தெய்வங்க ளாக வழிபட்டு வந்தனர். இதற்குத் 'தேவ' என்னுஞ் சொல்லே சான்றாம்; இச்சொல் 'ஒளி' என்று பொருள்படும் 'திவ்' என்னுந் தாதுவடியாகப் பிறந்ததாகும். ஆகவே, ஒளியுற்று விளங்கும் ஆகா யத்தையும், வான்மீன்களையும், சூரியனையும், விடியற் காலத்தையும், நண்பகற் பொழுதையும் பிறவற்றையுந் தெய்வங்களாகத் துணிந்து வழி படுவாராயினர். இன்னுந் தேவர்களெல்லாம் வான் நிலன் என் னும் இரண்டின் பிள்ளைகளென்றும் ஆண்டாண்டு அந்நூலிற் சொல் லப்பட்டனர். 'சோம' என்னும் ஒருவகைப் பூண்டை நசுக்கிப்பிழிந் தெடுத்த இரசம் மதுக்களிப்பைத் தருவதெனவும், இச்சோமரசமே வான், நிலன், அக்கி, சூரியன், இந்திரன், விஷ்ணு என்னுந் தெய்வங் களை யெல்லாந் தோற்றுவித்த தெனவும் ஒரு சில இடங்களில் இருக்கு வேதங் கூறுகின்றது. வேறு சில இடங்களில் சாவித்திரி யும் அக்கியும் தேவர்கட்கு இறப்பில்லா வரம் அருளிச் செய்தனர் என்கின்றது. மற்றுஞ் சில இடங்களில் எல்லாத் தேவர்களும் ஒரே வகையான ஆற்றலுடையரென் றுரைத்துப்போய்ப் பின் அக்கி, இந்திரன், சூரியன் எனும் மூவரே மற்றை எல்லாரினுஞ் சிறந்தோ ராவ ரென்கின்றது. இன்னும் இவரைத் தவிரத் தயஸ், ப்ரிதிவி, அதிதி, ஆதித்யர், வருணன், பார்ஜன்யன், வாயு, மருத்துக்கள், மித் திரன், பூஷன், உஷஸ், அசுவினிகள், த்வஸ்திரி, ரிபுக்கள், விசுவ கர்மன், ப்ரஜாபதி, ப்ருகஸ்பதி, வாக், சோம, ருத்ர, யமன் விசுவ தேவர்கள், பித்ருக்கள் முதலாகத் தேவர் பலப்பலர் கூறப்படுகின்ற னர். இங்கே விஷ்ணு என்று சொல்லப்பட்ட தெய்வம் திருமால் அன்று; சூரியனே, காலை நண்பகல் பிற்பகல் என்னு முப்பொழுதி னும் வான் கடந்து செல்லு நிலையில் விஷ்ணு வென்னும் பெயரோடு

பொலிகின்றான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உருத்திரன் என்று சொல்லப்பட்ட தெய்வம் சிவபிரான் அன்று; சூறுவளிக்குத் தெய்வமே உருத்திரன் என்று ஆண்டுச் சொல்லப்பட் டிருக்கின் றது. 'ருத்ரன்' என்னுஞ் சொல்லுக்குத் தாதுப்பொருள் 'முழக்க மிடுவோன்' 'ஊளையிடுவோன்' என்பனவாம். இவ்வேற்றுமைதெரி யாதார் உருத்திரனுஞ் சிவனும் ஒருவரே யெனத் தமக்குத் தோன் றியவாறே மொழிவர். 'சிவம்' என்பது கந்தழி என்னும் வேறு பெயருமுடைய பரம்பொருள்; அஃது உருத்திரன் பிரமன் என்றற் றொடக்கத்துத் தேவர்கட்கெல்லாம் அப்பாற்பட்டதொன்றாம்; இவ் வுண்மை

"தேவர்கோ வறியாத தேவ தேவன் செழும்பொழில்கள்
பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன்" என்ற மாணிக்கவாசகப்பெரு மான் அருமைத் திருவாக்கானும் நன்று தெருட்டப்படும். இருக்கு வேதம்முழுவதும் துருவித் துருவிப் பார்ப்பினும் 'சிவம்' என்னும் பரம்பொருளியல்பு காணப்படமாட்டது. அங்கெல்லாம் உலக இய ற்கைப்பொருள்களாற் றாம்பெறும் பயன் குறித்து அவை தம்மை யெல்லாம் தம் அறியாமையாற் றெய்வங்களாகக் கருதி ஆரியமக்கள் வழிபட்டு வந்த கீழ்நிலை அறிவு புலப்படக் கிடக்குமே யல்லது, பரம் பொருட் சொரூப முணர்ந்த மேல்நிலை அறிவு சிறிதாயினும் ஆண் டுப் பெறப்படுதலில்லை. அறிவிற் சிறந்த தமிழ் மக்காள்! இங்ஙு னம் வேதத்தின் உண்மைகூறி மாந்தர்க்கு அறிவு கொளுத்த வருவா ரைக் கண்டு மனம் புழுங்கி உயர் குலத்தினரெனத் தம்மை இறு மாந்தெண்ணி யிருப்பார் சிலர் 'அவைதிகர்' எனப் புறம்பழிப்பர். அவர் கூறும் அப்புறம்பழிப்புரைக்குச் சிறிதும் அஞ்சன்மின்! எவர் யாது கூறினும் உண்மை கரக்கப்படாதென்க. இத்துணைக் கீழ்நிலை அறிவையேபோதித்துப் பயனின்றிவிரிந்துகிடக்கும் அவ்வேதத்தை ப்பிரமாணமாகக் கொள்ளாதவர்என்றுஎம்மைப்புறம்பழிப்பதுபற்றி நம்மனோர்க்குவரும் இழுக்கென்னை? ஒருசிறிது மில்லையாகலின், நாம்தத்துவவுரிமைகைவிடாமாய் மெய்ப்பொருள்கூறுதலையே கடை ப்பிடிப்பாமாக. நமக்கும் மற்றும்அறிவுடையார்எல்லார்க்குஞ் சிறந்த பிரமாண மெய்ந்நூல்களாயுள்ள தொல்காப்பியம், திருக்குறள் முதலியனவே நமக்குச்சாலுமென்று மனந்திருந்துமின்கள்! பிறர் கூறும்பகட்டுரைக்கஞ்சி உண்மையைக் கைவிட்டுவிடாதீர்கள்!

இனிச்சிவம்என்னும் அப்பரம்பொருள்நிலை அவ்விருக்குவேதத்திற்கூறப்படாததுகொண்டு அதன்பெருமை குன்றுமாறில்லை. பரப்பிரமப்பொருள்நிலை யறியமாட்டாத அறிவில்லாப்பிள்ளைமைப் பக்குவத்தின்கண்ணரான ஆரியமக்கள்செய்த அவ்விருக்குவேதத்திற் கழிபெருநுண்ணறிவாற் றமிழ்நன்மக்களறிந்த அம்முழுமுதற்பொருள் நிலைஎவ்வாறுகாணப்படும்? சிறார் இழைத்துவிளையாடும் மணற்சிற்றிலிலே நுண்ணறிவுவாய்த்த தச்சரியற்றும் விசித்திரமாடங்கள்காணப்படுதலுண்டோ? எந்தநுண்பொருள் எவர்வயின்வருமோ அஃது அவர் பாலேஆராயற்பாலதாம். அஃதொழிந்து ஓர்அறிவுடையாரிடத்துப் பெறப்படும் ஓரும்பொருளை எனையோர்அறிவிலாரிடத்துக் கேட்க முந்துவாரைப்போல்,தமிழ்நூலிற்களிற் குறிக்கப்படும் அந்தரங்க மெய்பொருட்குப்பிரமாணம் வடநூலிற்றேடுதல் பெரிதும்நகையாடிஇகழற்கேதுவாம். இவ்வாற்றுல் யாம் வடநூல்களை இகழ்கின்றேம் என்றுநினையன்மின்! யாம்அவற்றின் உண்மைத்தன்மை கூறியதேயன்றிப்பிறிதில்லை. இனிவடநூலிற் சிறந்தநுண்ணறிவு காணப்படும் சாங்கியம், உபநிடதம், வேதாந்தசூத்திரம், சிவாகமம்முதலியவற்றை இங்ஙனந்தாழ்த்துக்கூறுதற்கு யாம் ஒருசிறிதும் ஒருப்படேம் ஒருப்படேம்.

இனிஅவ்விருக்குவேதத்திற் போந்த அப்பல்தேவர்உபாசனையேனும்விழுப்பமுடையவா வென்று ஒருசிறிது ஆராய்வாம். மதுக்களிப்பைவிளைத்து அறிவைமயக்கி மழுக்கும்சோமரசபானத்தைச் சிறப்பித்து உபாசித்தபதிகம்ஒன்றனை இங்கேமொழிபெயர்த்துவரைகின்றும்; அதுகொண்டுஅவ்விருக்கு வேதப்பான்மை அறிவுடையார்க்குஎல்லாம்இனிது விளங்கக்கிடக்கும்.

இருக்குவேத ஒன்பதாம் மண்டிலம்.

முதற்பதிகம் சோமபவமானம்.

இந்திரன் பருகுதற்பொருட்டு நறுக்கிப்பிழிந்த
ஓசோமரசமே! மிகத்தித்திப்பதாய் மகிழ்ந்தசெலவினை
யுடைய நீரோடைபோல் சுத்தமாய்நின்வழியே ஒழுகுக. (க)

பகைவரையடக்குவோய்! மக்களெல்லார்க்கும் நட்பாள!
அப்பரிசையால் அவன்தன்உயர்நிலையையும் இருப்பாணையும்
அடைந்தான். (உ)

நீவிருத்திரனைக்கோறற்குச் சிறப்புடையையாகுக,
இன்பந்தருதற்குத் தலைமையுடையை யாகுக, மிகுந்த
வள்ளன்மையுடையையாகுக: செல்வமிகுந்தளம்
இளவரசர்கொடையை விருத்திசெய்க. (௩.)

வலியதேவர்கட்கு ஆற்றும்விருந்திற்கு நினதுஇரசத்
தைஒழுகச்செய்க: எங்கட்குவலிவும் புகழும்உண்
டாதற்பொருட்டு இங்கேவருக. (௪)

ஓ இந்துவே! நாளுநாளும் இவ்வாறே கருத்தோடு
நின்னருகே வருகின்றேம்: நினக்கே எம்வேண்டுகோள்
மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. (௫)

சூரியன்புதல்விஎன்றும் யாட்டுமயிர்க்கம்பலத்தால்
நின்சோமரசத்தைவடித்துச்சுத்தியாக்கிஒழுகவிடுகின்றாள். (௬)

மெல்லியரானபதின்மர்தோழிமார் சுறுக்கும் இயந்திரத்தில்
அவனைப்பிடித்துவைத்து முடிவுநாள்வரையில் அவனைவிடாது
கொண்டிருக்கின்றனர். (௭)

அக்கன்னிமகளிர் பின் அவனைப்போகவிடுகின்றார்: இசை
கூட்டுவானைப்போல் அவர்கள் துருத்திஊதிப்
பகைவரைஓட்டும் முக்கூட்டுப்பானத்தை
உருகச்செய்கின்றனர். (௮)

இந்திரன்பருகுதற்பொருட்டு, ஊறுசெய்யப்படாதபால்
ஆக்கள்அவனைச்சுற்றிலுங் கூடியிருந்துபுதியஇளஞ்
சோமரசத்தில் தமதுபாலைக்கலப்பிக்கின்றன. (௯)

இவ்விரசத்தைப்பருகின பெருங்களிப்பால் இந்திரன்
விருத்திரரைஎல்லாம் கொல்கின்றான்: அவன்தன்செல்வத்
தை நமக்குச்சொரிந்துதருகின்றான். (௧௦)

இப்பெற்றியவாம் பதிகங்களேஇருக்குவேதம் முழுவதும்நிரம்பிக்
கிடக்கின்றன. இன்னோரன்னபதிகங்களிற் காணப்பட்டஉபாசனை
கள் இன்றும் மிகமந்த பக்குவமுடையமாக்கள் நாடுகளிற்காட்டேரி,
இருளன், கறுப்பன்முதலிய சிறுதெய்வங்களைவழிபட்டு வரும்முறை
களோடு ஒத்திருக்கின்றனவேயல்லது வேறென்னை? இன்னும்ஆரி
யர் சோமரசபானத்தான் வேள்விகள்வேட்டதன்றியும் வெள்ளாடு

கள், செம்மறியாடுகள், பசுமாடுகள், எருமைமாடுகள், குதிரைகள், மனிதர்முதலிய எண்ணிறந்தபிராணிகளைக் கொன்றுவேட்டு அவற்றின் மாமிசத்தைப் புசித்துவந்தார்கள். மனிதன்மனிதனைக்கொன்று புசிக்குஞ்செய்கை எவ்வளவுகொடுமையானசெயல்! நக்கவாரம்முதலியதீவகங்களில்வசிக்கும் மிக்கஅநாகரிக சாதியாரேஇன்றும்நரமாமிசம்புசித்துவருகின்றனர். பிராணிகளில் மனிதர்க்குப் பலவகையாலும்பயன்படுதலுடைய பசுமாடு, குதிரைமுதலியவற்றைச் சிறிதும் இரக்கமின்றிக்கொன்று அவற்றின்ஊனைவிரும்பி வேண்டியமட்டும் புசித்து வந்தனராயின், பண்டைக்காலஆரியசாதியார் எவ்வளவு கொடியவர்களென்றும் எவ்வளவு அறியாமை யுடையவர்களென்றும் எண்ணவேண்டி யிருக்கின்றது! இவ்வளவு கொடுஞ்செயலுஞ் செய்துகொண்டு, இக்கொடுஞ்செயலுக் குபகரணமாகத் தாம் பாடிவைத்துக்கொண்ட இழிந்தவேதப்பாட்டுக்களைத் தம்மின்வேறான தமிழ்மக்களும் ஒருப்பட்டுத்தழுவிக் கௌரவிக்கும்படி வற்புறுத்து வரும் அவர்செயல் நினையுங்காலெல்லாஞ் சாலவும்வஞ்சனையுடைத்தென்றுதோன்றுகின்றது. இத்தகைய கொடுஞ் செய்கையுஞ் சுவர்க்கத்தைத்தருமென்ற அவாதுபோலிப் பொய்யுரையைமறுத்தற் கன்றேநம்முதுகுரவரான தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

"அவிசொரிந்தாயிரம் வேட்டலின்ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமைநன்று" என்றுதிருவாய்மலர்ந்தருளினார். சாங்கியம்என்னும் அரியதத்துவசாத்திரம் வகுத்தெழுதிய ஞானசிரேட்டரான கபிலரும் "கணக்கில்லாப் பிராணிகளைக்கொல்வித்து அவற்றின்இரத்தத்தை ஆறாய்ப்பெருகச்செய்வித்தலின் வேதங்கள் அசுத்தமுடையன." * என்றுஓதினார். அதுநிற்க.

இனி, மேற்கூறியவாறு இருக்குவேதம் முதலியன சாமானிய பௌதிகவழிபாட்டில் தலைநின்றனவாயினும், அவ்வேதமுடிபான உபநிடதங்களும் சாங்கியம்வேதாந்தசூத்திரம் முதலியனவுமெல்லாம் உயர்ந்ததத்துவநுண்பொருள் போதிக்கக்காண்டலின் ஆரியமக்கள் பிற்றைஞான்று பேரறிவுடையாராயின ரென்னுமோ வெனின்;— என்னும். உபநிடதமுதலான ஞானநூல்கள் ஆரியபாஷையில் எழுதப்பட்டிருத்தல்பற்றி அவைஆரியமக்களாற் செய்யப்பட்டன வென்றல் வழுவாம்.

* சாங்கியகாரிகை.

பண்டைநாளில் தமிழ்மக்கள் வடக்கே இமயமலைச்சாரல்வரையி லும் மேற்கே ஆப்கானிஸ்தானம் வரையிலும் பரவியிருந்தனர். இதற்கு அறிகுறியாக இன்றும் ஆப்கானிஸ்தானம் பெலுசிஸ்தானம் என்னும் நாடுகளில் தமிழோடுமிக்கசம்பந்தமுடைய பிராகி என்னும்பாஷைவழங்கப்பட்டு வருகின்றது. இமயமலைச்சாரலில்வசிக்கும் குன்றவர்களெல்லாரும் தமிழின் திரிபானஒருபாஷை வழங்கிவருகின்றனர். இதுவேயன்றிவடநாட்டிற்பழையபலவூர்களெல்லாந் தமிழ்ப்பெயர்பெற்றுவிளங்குகின்றன. 'தமிழக்' என்னும்ஊர் வடநாட்டிலிருத்தல் யாருமறிந்ததொன்றேயாம். இஞ்ஞான்றும் வடநாட்டி லிருப்போரிற் பெரும்பாலார் பண்டைக்காலத்தமிழ்ச் சந்ததியாரேயாவர். பாஷைகாலவேறுபாட்டால்வேறுபடினும் மக்கள் சாதிப்பிறப்புயாண்டும் ஒருதன்மையாகவேயிருக்கும். முன்னாளிற்றமிழர் மிகப்பிரசித்தி பெற்று வாழ்ந்தபோது வடஆசியாவிலிருந்துசிந்துநதிப்பக்கமாய் ஆரியமக்கள் இந்தியாவினுட்புக, உள்ளிருந்ததமிழர் இயற்கையிலேவிருந்து வருவாரைஓம்பி உபசரிக்குங்கடப்பாடுடையராதலால் தம்நாடுதேடிப்பிழைக்கவந்த ஆரியமக்களை நல்வரவாகஏற்று அவர்க்குவேண்டுவன தந்துஓம்பினர். ஆரியர்வருங்காலத்துத் தமிழர் மிக்க நாகரிகவாழ்வுற்றிருந்தனரென்பதை இருக்குவேத வுரைகொண்டு முன்னரே இனிதுவிளக்கினம். இனி, அங்ஙனம்போந்த ஆரியமக்களோடுதமிழர் பெரிதும் அளவளாவினராகலின் அவர்க்குரிய ஆரியபாஷையினையுந்தாங்கற்று அதனையும் பண்படுத்திவந்தனர். ஆரியமக்கள்செய்யும்வேள்விவிழாக்களுக்குத் தாமும்பொருளுதவிசெய்து அவற்றை நடைபெறுவித்து வந்தனராயினும், அவ்வேள்விவேட்டல் சிறிதும் பயன்படாமைஅறிவித்து அவர்க்குத்தத்துவ நுண்பொருள்களையுந் தமிழர் ஆங்காங்கு உணர்த்துவாராயினர். புதியராய்வந்தோர் தாம் வழக்கமாகமேற்கொண்டு செய்யும்ஒருகருமத்தைச் சடுதியிற்செய்ய வேண்டாமென்று நிறுத்தினால்அவர்மிக மனம்வருந்துவராகலின், அவர்க்குமுதலில் உபகாரிகளாய்நின்று அவர்வேண்டிய வேள்விக்கன்மங்களையும் நடாத்திவந்ததமிழர் பின் சிறிதுசிறிதே அவர்க்குத் தத்துவ நுண்பொருளறிவுகொளுத்தி வேள்விவேட்டல் பயன்படாமையேயன்றிப் பாவமுடைத்தாதலுங்காட்டுவர். இங்ஙனந்தமிழாசிரியர்காட்டிய உபதேசமொழிகளே உபநிடதங்களென்று பிற்றைஞான்றுபெயர்பெறலாயின. உபநிடதங்களெல்லாம் ஒருமுகமாய்நின்று

வேள்விவேட்ட லாகாதென்றும், மக்களெல்லாருந் தத்துவஞானந் தலைப்படுதல் வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றன. வேதங்களிற் சொல்லிய கன்மங்களுக்குமுற்றும் விரோதமாய்நின்று அவைதம்மை பழித்துத் தத்துவஞானமேம்பாடு புலப்படுக்கும் பெற்றியனவாம் அவை வேதாந்தமெனவும் பெயர்பெறுகின்றன. வேதமும்வேதாந்தமும் தம்மிற்பெரிதும் முரணிநிற்பனவாம். வேதம் கன்மங்களை மிக்கெடுத்துக்கூறுவன; வேதாந்தம் அவற்றைப்பழித்து ஞானத்தைமிக்கெடுத்துக்கூறுவன; வேதம்ஆரியமக்களாற் செய்யப்பட்டன; வேதாந்தம் தமிழ் மக்களாற் செய்யப்பட்டனவாம். வேதமாத்திரம் அறிந்தஆரியர் வேதாந்தமறிந்ததமிழர்பால் அதனைக்கற்றறிவாராயினர். பண்டைக்காலத்தமிழர்க்குட் பிரபலவேந்தராயிருந்த சனகன் சைவலி, அசாதசத்துருமுதலிய மன்னர்மன்னர் ஆரியர்க்குவேதாந்தம்உணர்த்தியவரலாறு சதபாதபிராமணம், உபநிடதம்முதலிய நூல்களாற்றெற்றென விளக்கப்படுகின்றது. தமிழமன்னரும் அம்மன்னர்குடியாரும் ஆரியரால்அரசினியார் என்றழைக்கப்பட்டவாறுமுன் இனிதுவிளக்கிப்போந்தாம். அப்பெற்றியராம் 'ராஜந்யர்' ஆரியர்க்குத் தத்துவஞானம் புலங்கொள அறிவுறுத்து வந்தமைக்கு ஈண்டு இரண்டோர் உதாரணங்காட்டுதும்.

சதபாதபிராமணம் கக-ஆம் புத்தகம்.

"விதேகர்கட்கு மன்னனானசனகன் அப்போதுதான் வந்த பிராமணர்சிலரைச் சந்தித்தான். அங்ஙனம் சந்திக்கப்பட்டவர்கள் சுவேதகேது ஆருணேயர், சோமசுஷ்மசத்யயஞ்ஞர், யாஞ்ஞவற்கியர்என்பவராம். அவன் அவர்களைநோக்கி: 'நீங்கள் அக்கிஹோத்திரத்தை எவ்வாறு செய்கின்றீர்கள்.?' என்றுவினவினன். பிராமணர்மூவரும் தம்மாற் கூடியவரையினும் விடைகூறினராயினும், அவர்கூறிய தொன்றேனும் திருத்தமானதன்று. யாஞ்ஞவற்கியர்கூறியது சிறிதுபொருந்தினும் அதுவும்முற்றும் திருத்தமாகவில்லை. சனகன் அவ்வளவுதானோவென்று சொல்லிவிட்டுத் தன் இரதத்தின்மேலேறிப் போயினன். அக்குருக்கள்மூவரும் 'ராஜந்யவகுப்பைச்சேர்ந்த இப்பயல்நம்மைஅவமானம் செய்தனனே' என்றுகூறினர். யாஞ்ஞவற்கியர்மாத்திரம் இரதத்தின்மேலேறி அவ்வரசனைத்தொடர்ந்

துபோய் அவனால் அதன் நுண்பொருளறிவிக்கப்பட்டுத் தமதறியாமைநீங்கினர். அதுமுதற்சனகன் பிராமணனாக நன்குமதிக்கப்பட்டான்'' என்றுசொல்லப்பட்டது.

சாந்தோக்கியஉபநிடதம் ரு-வது பிரபாடகம், ந-வது கண்டம்.

''சுவேதகேது ஆருணேயர் பாஞ்சாலமன்னன் அவைக்களத்தேசென்றார். பிரவாகனசைவலி என்னும் அவ்வேந்தன் அவரைநோக்கிப் 'பிள்ளாய்! நின்றந்தை நினக்குஞானோப தேசஞ்செய்தனரா?' என்று கேட்டான். 'ஐயா! ஓம் அவர்செய்தனர்' என்று அவர் விடைகூறினர். (க)

'இந்நிலத்தினின்றும் மக்கள்எங்கு எழுகின்றனர் நீ அறிவையா?' என்று வேந்தன்வினவினன்; அதற்குஅவர் 'ஐயா, நான் அறியேன்' என்றார். 'திரும்ப அவர்எங்குசெல்கின்றார் அறிவையா?' எனவினவினன்; அதற்கவர் 'ஐயா நான்அறியேன்' என இறுத்தார்., 'தேவயானத்திற்கும் பிதிர்யானத்திற்கும் எங்கே பேதமுண்டாகின்றது அறிவையா?'' எனவினவினன்; 'ஐயா நான் அறியேன்' என்றார். (உ)

'மறுமையுலகம் என்நிறைக்கப்படுவதில்லை அறிவையா?' என்றுவினவினன்; அதற்குஅவர் 'அறியேன் ஐயா' என்றார்; 'பஞ்சமாகுதியில் திரவப்பொருள்கள்ஏன் புருஷசப்தமெய்துகின்றன அறிவையா'? என்றுவினவினன்; அதற்கவர் 'ஐயாநான் அறியேன்' என்றார். (ந)

'அப்படியாயின் உபதேசம்பெற்றேனென்று ஏன்இங்குவந்தாய்? ஒன்றுமறியாதவன் அறிவிக்கப்பட்டானென்று நீ எப்படிச்சொல்லலாம்?' என்றான் அரசன். அதனைக்கேட்டலும் மிக்கவிசனத்தோடும் தந்தந்தையிடம்திரும்பிப்போய் 'தந்தாய்! எனக்கொன்றும்உபதேசியாமலே, எல்லாம் உபதேசிக்கப்பட்டனவென்றீரே' என்றான். (ச)

'அப்பொல்லாதஅரசன் என்னை ஐந்து வினாக்கள் வினவினன், அவற்றுள் ஒன்றற் கேனும் என்னால் விடையிறுக்கமுடியவில்லையே' என்றான். அதுகேட்டதந்தை 'நீசொன்ன அக்

கேள்விகள் ஐந்தனுள் ஒன்றற்கேனும் எனக்கேவிடைதெரியவி ல்லையே; அவைஎனக்குத் தெரிந்தனவாயின் நினக்கேன் யான் சொல்லாமலிருப்பேன்?' என்றுகூறினான் (ரு)

கௌதமகோத்திரத்தாரான அவர்தந்தை அவ்வரசன் அரண்ம னைக்குப்போயினார். அவர்வருகையைக்கண்ட அரசன்விருந்தி னர்க்குச்செய்யும் உபசாரங்களெல்லாம் ஆற்றினான். மறுநாட் காலையில் அவர் அரசன் அவைக்களத்தேசென்றார். அரசன் அவரைநோக்கி. 'ஓ கௌதமரே! உலகத்துப்பொருள்களிற் சிறந்ததெதுவென்று நினைக்கின்றீரோ அதனைக்கேளும்' என் றான். அதற்கவர் 'உலகியற்பொருள்கள் எனக்குவேண்டாம் அவைநின்பாலேயிருக்கட்டும். ஓ வேந்தனே! நீ என்புதல்வ னைக் கேட்டஐந்து வினாக்களையும் எனக்குவிளக்கிச்சொல்லுதல் வேண்டும்' என்றார். (சு)

அதுகேட்டரசன் விசனமுடையானாய், 'என்னுடன் சிலநாள் இருக்கக்கடவீர்' என்றுகட்டளையிட்டான். அதுகழிந்தபின், அரசன் அவரைநோக்கி 'நீர் இவ்வாறுவிசாரணை செய்யப்புகுந் தமையானும், இதற்குமுன் பிராமணன் எவனும் இவ்விரகசிய த்தை அறியானாகலானும், இவ்வுலகத்திலுள்ள எல்லாமக்களுள் ளும் ராஜந்யர்க்குமாத்திரமே இதனைஉபதேசிக்கும் உரிமையுண் டாகலானும் யாம்இதனை உமக்குஅறிவுறுத்துகின்றாம்" என்று உபதேசிக்கத் தொடங்கினான்" என்றுசொல்லப்பட்டது.

இன்னும் இவைபோல உபநிடதங்களில் ஆண்டாண்டு வருவன வெல்லாம் ஈண்டுக்காட்டலுறின் இதுமிகவிரியுமெனவஞ்சி விடுக்கின் றாம்.இவைதம்மால் தேறப்படும் முடிபுரையாதெனின், ராஜந்யர்அல் லது அரசினியார் என்று ஆரியரால் அழைக்கப்பெற்ற பண்டைக்கா லத்தமிழ் நன்மக்களே ஆரியப்பிராமணர்க்குத் தத்துவ ஞானோபதே சஞ்செய்து வந்தன ரென்பதேயாம்என்க. ஆகவே, உபநிடதம் தமி ழாசிரியரால் ஆரியபாஷையில் எழுதப்பட்டன வென்னுமுண்மை தெளிபொருளாய் நிலைநிறுத்தப்பட்டது. வேதாந்தசூத்திரம், சாங்கி யம், நையாயிகம், வைசேடிகம், முதலியனவெல்லாம் வகுத்து நுண் பொருள் பொதுளஎழுதினார் தமிழாசிரியரேயாமென்பதூஉம், புத்த சமயம் விளக்கிய கௌதமசாக்கியரும் தமிழாசிரியரேயா மென்ப

நூஉம் முல்லைப்பாட்டாராய்ச்சி, திருக்குறளாராய்ச்சியில்நன்குவிளக்கிக்காட்டினும். ஆண்டுக்காண்க. இவ்வாறு தத்துவஞானங்களும் அவைதிருந்தவிளக்கிய உபநிடதம் சிவாகமமுதலியனவும் தமிழர்க்கேஉரியனவாய்ப் பின் ஆரியராற்றமிழரிடமிருந்து பெறப்பட்ட ஆரிய இரவற்பொருணூல்களாய் நிலைப்பவும், இஞ்ஞான்றை ஆரியர் அவைதமக்கே உரியனவெனவும், அவைதம்மைத்தமிழர் ஓதப்பெருரெனவுங்கூறுதல் சிறுமகாரானும் எள்ளிநகையாடற்பாலதாம். இஞ்ஞான்றை ஆரியர் தமிழர்செய்த நன்றியைச் சிறிதும்ஓராது' நீட்டினமாத்திற் கூர்பார்த்தல்' ஒப்பத் தமக்கு அறிவுகொளுத்திய பண்டைத்தமிழ்மக்கட் சந்ததியாராம் நம்மனோர்பாற் செய்துபோதரும் படிற்றொழுக்கம் மிகப்பெரிது! அவர்படிற்றொழுக்க வியல்புஇனைத்தென்றறியாத நம்மனோரும் அவர் மயக்கவுரையில் விழுந்து அவமேயாகின்றார். இனியேனும் நம்மனோர் தம் பெருஞ்சிறப்புணர்ந்து ஆக்கமெய்துவாராக.

முற்றும்.